بسم الله الرحمن الرحيم نحمده ونصلّي على رسوله الكريم وعلى عبده المسيح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَأَنْتُمْ أَذِلَّةٌ

தொகுதி 4

இதழ் 8

# பதர்

வார இதழ் - காதியான்

The Weekly BADAR Qadian TAMIL

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அ.கலீல் அஹ்மது

15 ஜமாதிஸ் ஸானி 1440 ஹிஜ்ரி கமரி 21 தப்லீக் 1398 ஹிஜ்ரி ஷம்ஸி

21 பிப்ரவரி 2019


### அல்லாஹ்வின் கட்டளை

قُلْ اِنْ تُخْفُوْا مَا فِيْ صُدُوْرِكُمْ اَوْ تُبْدُوْهُ يَعْلَمْهُ اللّٰهُ ۭ وَيَعْلَمُ مَا فِي السَّمٰوٰتِ وَمَا فِي الْاَرْضِ ۭ وَاللّٰهُ عَلٰي كُلِّ شَيْءٍ قَدِيْرٌ ۝

நீர் (அவர்களிடம்) கூறுவீராக: உங்கள் உள்ளங்களில் இருப்பதனை நீங்கள் மறைத்து வைத்தாலும் அல்லது அதனை வெளிப்படுத்தினாலும், அல்லாஹ் அதனை நன்கறிவான். வானங்களிலுள்ளவற்றையும், பூமியிலுள்ளவற்றையும் அவன் அறிகின்றான். அல்லாஹ் எல்லாவற்றிற்கும் பேராற்றல் பெற்றவன். (3:30)

### அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**இறைவன் இறையச்சமுடையவர்களுக்கு அவனே பாதுகாவலனாகி விடுகின்றான். மேலும் உண்மைக்கு எதிராகச் செயல்பட கட்டாயத்திற்கு உள்ளாகின்ற சந்தர்ப்பங்களிலிருந்து பாதுகாக்கின்றான். நினைவில் கொள்ளுங்கள். எவர் இறைவனை விட்டு விட்டாரோ இறைவனும் அவரை விட்டு விடுவான். ரஹ்மானாகிய அந்த இறைவன் விட்டு விடும்போது பிறகு ஷய்த்தான் தனது தொடர்பை ஏற்படுத்திக் கொள்வான்**

**வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...**

### இறையச்சத்தின் அருட்கள்

இறையச்சம் மற்றும் தூய்மையில் நாம் எதுவரை முன்னேற்றமடைந்துள்ளோம் என்பதை நாம் எப்போதும் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும். இதன் படித்தரம் திருக்குர்ஆன் ஆகும். அல்லாஹ் இறையச்சமுடையவர்களது அடையாளங்களில் ஓர் அடையாளமாக இதையும் வைத்துள்ளான். அதாவது இறையச்சமுள்ளவர்களை உலகின் விரும்பத்தகாதவற்றிலிருந்து காப்பாற்றி அவரது பணிகளுக்கு தானே பொறுப்பேற்றுக் கொள்கிறான்.

அவன் கூறுகின்றான்:

وَمَنْ يَّتَّقِ اللّٰهَ يَجْعَلْ لَّهٗ مَخْرَجًا وَّيَرْزُقْهُ مِنْ حَيْثُ لَا يَحْتَسِبُ

அதாவது எந்த நபர் இறைவனுக்கு அஞ்சுகின்றாரோ அவரை அல்லாஹ் எல்லா விதமான துன்பங்களிலிருந்தும் இரட்சிப்பிற்கான வழியை ஏற்படுத்தி விடுகின்றான். மேலும் அவர் சிந்தித்துப் பார்த்திராத வழிகளிலிருந்து அவருக்காக வாழ்வாதாரத்திற்கான ஏற்பாடுகளை உருவாக்கி விடுகின்றான். அதாவது இறையச்சமுடையவர்களது ஓர் அடையாளம் என்னவென்றால், அல்லாஹ் இறையச்சயமுள்ளவர்களை வீணான தேவைக்குட்பட்டவர்களாக வைப்பதில்லை.

உதாரணமாக, ஒரு கடைக்காரர் ஏமாற்றாமல் நமது பணி நடைபெற இயலாது என்று கருதுகின்றார். ஆனால் இந்த விஷயம் ஒருபோதும் உண்மையல்ல. இறைவன் இறையச்சமுடையவர்களுக்கு அவனே பாதுகாவலனாகி விடுகின்றான். மேலும் உண்மைக்கு எதிராகச் செயல்பட நிர்பந்தத்திற்கு உள்ளாகின்ற சந்தர்ப்பங்களிலிருந்து பாதுகாக்கின்றான்.

நினைவில் கொள்ளுங்கள். எவர் இறைவனை விட்டு விட்டாரோ இறைவனும் அவனை விட்டு விடுவான். ரஹ்மானாகிய அந்த இறைவன் விட்டு விடும்போது பிறகு ஷய்த்தான் தனது தொடர்பை ஏற்படுத்திக் கொள்வான். இறைவன் பலவீனமானவன் என்று ஒருபோதும் கருதாதீர்கள். அவனது இருப்பு மிகப்பெரும் ஆற்றலைக் கொண்டதாகும். ஏதாவதொரு விவகாரத்தில் அவன் மீது நம்பிக்கை வைப்பீர்கள் என்றால் நிச்சயமாக அவன் உங்களுக்கு உதவி செய்வான்.

وَمَنْ يَّتَوَكَّلْ عَلَى اللّٰهِ فَهُوَ حَسْبُهٗ

ஆனால் இந்த வசனம் மார்க்கத்தைப் பின்பற்றுபவர்களைத்தான் முதலில் கூறுகின்றது. அவர்களது முழு கவலையும் மார்க்க விஷயங்களுக்காகவே இருந்தன. அவர்களது உலக விவகாரங்கள் இறைவனிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன. எனவே அல்லாஹ் நான் உங்களுடன் இருக்கின்றேன் என்று அவர்களுக்கு ஆறுதல் வழங்கினான்.

ஆக தக்வாவின் அருட்களில் ஒன்று என்னவென்றால், அல்லாஹ் இறையச்சமுடையவருக்கு மார்க்க விவகாரங்களில் தடையாக இருக்கின்ற துன்பங்களிலிருந்து அவன் இரட்சிப்பை வழங்குகின்றான்.

### இறையச்சத்தை மேற்கொள்பவர்களுக்கு ஆன்மீக உணவு

அவ்வாறே அல்லாஹ் இறையச்சத்தை மேற்கொள்பவர்களுக்குக் குறிப்பாக ரிஸ்கை வழங்குகின்றான். இங்கு நான் இறைஞானம் தொடர்பான ரிஸ்கைப் பற்றி எடுத்துக் கூறுவேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு உம்மி நபியாக (எழுதப் படிக்கத் தெரியாத நபியாக) இருந்த போதிலும் முழு உலகையும் அவர்கள் எதிர்கொள்ள வேண்டியதிருந்தது.

அவர்களில் வேதத்தையுடையவர்கள், தத்துவவாதிகள், அறிவில் உயர் தகுதியைப் பெற்றிருந்த மக்கள் ஆலிமாக இருந்தவர்களும் அடங்குவர். ஆனால் அன்னாருக்கு ஆன்மீக உணவு எந்த அளவுக்குக் கிடைத்ததென்றால், பெருமானார் (ஸல்) அவர்கள் அந்த அனைவரின் மீதும் வெற்றி பெற்றார்கள். மேலும் அவர்கள் அனைவரது தவறுகளையும் வெளிப்படுத்திக் காட்டினார்கள். இது ஆன்மீக உணவாகும். இதற்கு எதிரான எந்த உதாரணத்தையும் காட்ட முடியாது. இறையச்சமுடையவர்களது கண்ணியத்தைப் பற்றிப் பிறிதோரிடத்தில் இவ்வாறு வருகின்றது.

اِنْ اَوْلِيَآؤُهٗٓ اِلَّا الْمُتَّقُوْنَ

(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**இஸ்லாம் தமது சிறப்புத் தன்மையின் மூலமாகவே பரவியது; வாளினால் அல்ல**

**மதீனா ஹிஜ்ரத் சம்பவத்தின்போது சவ்ர் குகையில் இருந்த ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) மற்றும் ஹஸ்ரத் அபூ பக்ர் (ரலி) அவர்களுக்கு தொண்டு செய்த மற்றும் பயணத்தில் அன்னாரோடு ஒன்றாக இருப்பதற்கான நற்பேற்றைப் பெற்ற, நன்றியுணர்வின் பிம்பமாகத் திகழ்ந்த பத்ர் போர் சஹாபியான ஹஸ்ரத் ஆமிர் பின் ஃபுஹைரா (ரலி) அவர்களின் அருளுக்குரிய வாழ்க்கையிலிருந்து உள்ளத்தை ஈர்க்கக்கூடிய நற்குறிப்பு**

**அன்னார் பிஃரே மவூனா சந்தர்ப்பத்தில் ஷஹாதத்தின் மகத்தான பானத்தை அருந்தி இஸ்லாத்தின் வரலாற்றில் நீங்காத இடத்தைப் பெற்றுள்ளார்கள்**

**அல்லாஹ் அன்னாரது அந்தஸ்தை உயர்த்திக் கொண்டே செல்வானாக**

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுஅல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 18 ஜனவரி 2018** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1397 -ஆம் ஆண்டு **சுலஹ்** மாதம் **18 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ- الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ- اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ- صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

இன்று நான் ஹஸ்ரத் ஆமிர் பின் ஃபுஹைரா (ரலி) அவர்களைப் பற்றி எடுத்துக் கூறுவேன். வரலாற்றில் இவர்களைப் பற்றிய குறிப்பு மிக நீண்டதாக இருக்கின்றது. இஸ்லாத்தின் வரலாற்றில் சில முக்கிய நிகழ்வுகளின் இவர்களது பங்கும் இருக்கின்றது. அதில் பங்கு பெறுவதற்கான நற்பாக்கியம் இவர்களுக்கு கிடைத்துள்ளது. அந்த சம்பவங்கள் எப்படிப்பட்டதென்றால் அதன் விளக்கத்தை எடுத்துக் கூறுவது அவசியமாகும்.

அபூ அமர் என்பது அன்னாரது சுட்டுப் பெயராகும். அஸ்து கோத்திரத்தைச் சார்ந்தவர்கள். ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் தாய்வழிச் சகோதரரான துஃபைல் பின் அப்தில்லாஹ் பின் சஹ்பரா (ரலி) அவர்களின் அடிமையாக இருந்தார்கள். அன்னார் இஸ்லாத்தை ஆரம்ப காலத்தில் ஏற்றுக் கொண்டவர்களில் ஒருவர் ஆவார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் தாரே அர்கமிற்கு செல்வதற்கு முன்பே இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டிருந்தார்கள்.

ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்களின் ஆடுகளை மேய்த்து வந்தார்கள். இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட பிறகு நிராகரிப்பாளர்களின் தரப்பிலிருந்து அன்னாருக்கு அதிகமான துன்பங்கள் கொடுக்கப்பட்டு வந்தன. பிறகு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அன்னாரை விலைக்கு வாங்கி விடுதலை செய்தார்கள். ஹிஜ்ரத் சந்தர்ப்பத்தின்போது பெருமானார் (ஸல்) அவர்களும், ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களும் சவ்ர் குகையில் இருந்தபோது அன்னார் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் ஆடுகளை மேய்த்து வந்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், ஆடுகளை தங்களிடம் கொண்டு வர வேண்டும் என்று கட்டளையிட்டிருந்தார்கள்.

எனவே அன்னார் நாள் முழுவதும் ஆடுகளை மேய்ப்பார்கள். மாலைப்பொழுதில் சவ்ர் குகைக்கு அருகில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் ஆடுகளைக் கொண்டு செல்வார்கள். பெருமானார் (ஸல்) அவர்களும், அபூபக்ர் (ரலி) அவர்களும் ஆட்டுப்பாலைத் தாமே கறப்பார்கள்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அபீபக்ர் (ரலி) அவர்கள் பெருமானார் (ஸல்) மற்றும் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் செல்லும்போது ஹஸ்ரத் ஆமிர் பின் ஃபுஹைரா (ரலி) அவர்கள் அவர்களது கால்களின் அடையாளங்கள் அழிந்து விட வேண்டும் என்பதற்காகவும், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் மகன் எங்கே செல்கின்றார்கள் என்பது தெரியக் கூடாது என்பதற்காகவும், நிராகரிப்பவர்களுக்கு எவ்வித சந்தேகமும் வந்து விடக் கூடாது என்பதற்காகவும் அவர்களுக்குப் பின்னாலேயே செல்வார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்களும், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும் சவ்ர் குகையிலிருந்து வெளியேறி மதீனா நோக்கிச் சென்றபோது ஹஸ்ரத் ஆமிர் பின் ஃபுஹைரா (ரலி) அவர்களும் அன்னாருடன் ஹிஜ்ரத் செய்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தமக்குப் பின்னால் இவர்களை அமர வைத்திருந்தார்கள். அவர்களுக்கு வழிகாட்டக்கூடிய பனூ அத்தீலைச் சார்ந்த ஒரு நபர் இருந்தார்.

(அஸதுல் காபா தொகுதி 3 பக்கம் 134 ஆமிர் பின் ஃபஹைரா (ரலி) – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

பெருமானார் (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத்திற்குப் பிறகு ஹஸ்ரத் ஆமிர் பின் ஃபஹைரா (ரலி) அவர்களுக்கும் ஹஸ்ரத் ஹர்ஸ் பின் அவ்ஸ் பின் மஆஸ் (ரலி) அவர்களுக்குமிடையில் சகோதரத்துவ பந்தத்தை ஏற்படுத்தினார்கள். ஹஸ்ரத் ஆமிர் பின் ஃபஹைரா (ரலி) அவர்கள் பத்ர், உஹது போர்களில் பங்கு பெற்றார்கள். மேலும் பேரே மவூனா போரில் தமது 40 ஆவது வயது வயதில் அன்னாருக்கு ஷஹாதத் அந்தஸ்து கிடைத்து.

(அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 174 ஆமிர் பின் ஃபஹைரா (ரலி)– 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹிஜ்ரத்திற்கு முன்பாக அல்லாஹ்வின் வழியில் துன்பத்திற்குள்ளான ஏழு அடிமைகளை விடுதலை செய்தார்கள். அவர்களில் ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களும், ஹஸ்ரத் ஆமிர் பின் ஃபஹைரா (ரலி) அவர்களும் அடங்குவர்.

(அஸதுல் காபா தொகுதி 3 பக்கம் 319 அப்துல்லாஹ் பின் உஸ்மான் அபூ பக்ர் சித்தீக் (ரலி) – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹிஜ்ரத் சம்பவத்தைப் பற்றி எடுத்துக் கூறியவாறு ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

நாங்கள் ஒரு நாள் சரியாக மதிய வேளையில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் வீட்டில் அமர்ந்திருந்தோம். அதாவது எங்களது வீட்டில் அமர்ந்திருந்தோம். செய்தி அறிவிக்கும் ஒருவர் ஹஸ்ரத்

அபூபக்ர் (ரலி) அவர்களிடம், பெருமானார் (ஸல்) அவர்கள் தமது தலையில் துணியைப் போர்த்தியவாறு வருகை தருகின்றார்கள் என்று கூறினார். அன்னார் (ஸல்) அவர்கள் சாதாரணமாக எங்களிடம் வராத ஒரு நேரத்தில் வந்தார்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: எனது தாயும் தந்தையும் உங்கள் மீது அர்ப்பணமாகட்டுமாக. நீங்கள் இந்த நேரத்தில் வந்துள்ளீர்கள். இறைவன் மீது ஆணையாக! நிச்சயமாக ஏதாவதொரு பெரிய வேலை இருக்கும்.

ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: இதற்கிடையில் பெருமானார் (ஸல்) அவர்கள் எங்களிடத்தில் வந்தார்கள். உள்ளே வருவதற்கு அனுமதி கேட்டார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அனுமதி வழங்கினார்கள். அன்னார் உள்ளே வந்து ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம், உங்களோடு இருப்பவர்களை வெளியில் அனுப்புங்கள் என்று கூறினார்கள்.

அதற்கு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! எனது தாயும் தந்தையும் உங்கள் மீது அர்ப்பணமாகட்டுமாக. என்னோடு வீட்டிலுள்ளவர்கள்தான் இருக்கின்றார்கள். அதாவது ஹஸ்ரத் ஆயிஷா (ரலி), உம்மே ரூமான் மற்றும் அவரது தாய் இருக்கின்றார்கள் என்று கூறினார்கள்.

பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள், எனக்கு ஹிஜ்ரத் செய்வதற்கு அனுமதி கிடைத்து விட்டது என்று கூறினார்கள். அதற்கு அபூபக்ர் (ரலி) அவர்கள், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! என்னையும் உங்களுடன் அழைத்துச் செல்லுங்கள். எனது தாயும் தந்தையும் உங்கள் மீது அர்ப்பணமாகட்டும் என்று கூறினார்கள். எனவே பெருமானார் (ஸல்) அவர்கள், நீங்களும் என்னுடன் வாருங்கள் என்று கூறினார்கள்.

பிறகு அபூபக்ர் (ரலி) அவர்கள், எனது தாயும் தந்தையும் உங்கள் மீது அர்ப்பணமாகட்டும். எனது இந்த இரண்டு ஒட்டகங்களில் ஒன்றை நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள் என்று கூறினார்கள். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், நான் விலை கொடுத்துதான் அதை வாங்குவேன் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: எனவே நாங்கள் விரைவாக இருவருக்குமுரிய பயணத்திற்குத் தேவைப்படுகின்ற பொருட்களை ஆயத்தம் செய்து தோலினால் ஆன பையில் வைத்தோம். ஹஸ்ரத் அபீபக்ர் அவர்களின் மகள் ஹஸ்ரத் அஸ்மா அவர்கள் ஒரு துணியை எடுத்து அந்த பையின் மேற்பகுதியை கட்டினார்கள். இதன் விளைவாக அவர்களின் பெயர் ஸாதுன் நிதாக் ஆனது.

இதற்கு பிறகு பெருமானார் (ஸல்) அவர்களும், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும் சவ்ர் குகையைச் சென்றடைந்தார்கள். அங்கு மூன்று இரவுகள் மறைந்திருந்தார்கள். ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அபூபக்ர் (ரலி) இவர்கள் இருவரிடத்திலும் சென்று இரவில் தங்குவார்கள். அவர்கள் புத்திக் கூர்மையுடையவராக இருந்தார்கள். இருள் நேரத்தில் அவர்களிடம் வருவார்கள். காலைப்பொழுதில் இருள் இருக்கும் நேரத்திலேயே திரும்பி வந்து விடுவார்கள்.

மேலும் மக்காவிலேயே இரவைக் கழித்தது போன்று அவர்களுடனேயே காலைப்பொழுதைத் துவங்குவார்கள். நிராகரிப்பவர்களின் திட்டங்களைப் புரிந்து கொண்டு இரவானதும் குகைக்குச் சென்று அவர்களிடம் எடுத்துக் கூறுவார்கள். நாள் முழுவதும் மக்காவில் இருப்பார்கள். நிராகரிப்பர்களின் அனைத்துத் திட்டங்களையும் மாலைப்பொழுதில் இங்கு வந்து எடுத்துக் கூறுவார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் அடிமையான ஆமிர் பின் ஃபுஹைரா (ரலி) அவர்கள் மேய்த்து வந்த ஆடுகளில் அதிக பால் தரக்கூடிய ஒன்றிரண்டு ஆடுகள் இவர்கள் இருக்கின்ற இடத்திற்கு அருகில் மேய்ந்து கொண்டிருக்கும். இஷா நேரம் கழிந்த பிறகு அந்த ஆட்டை அவர்களிடம் கொண்டு வருவார்கள். மேலும் இருவரும் புத்தம்புது பாலை அருந்தியவாறு இரவைக் கழித்தார்கள். ஹஸ்ரத் ஆமிர் பின் ஃபுஹைரா (ரலி) அவர்கள் இரவின் முற்பகுதியில் ஆட்டு மந்தை இருக்கின்ற இடத்திற்குச் சென்று விடுவார்கள். பிறகு ஆட்டை நோக்கி சப்தம் கொடுப்பார்கள். மூன்று இரவுகள் இவ்வாறே செய்தார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்களும், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும் பனூ தேல் கோத்திரத்தைச் சார்ந்த ஒருவரை வழிகாட்டுவதற்காகப் பணம் கொடுத்து வைத்திருந்தார்கள். அவர் பனூ அப்தே பின் அதீயை சார்ந்தவர். அதிகம் தெரிந்தவர். வழிகாட்டுவதில் தேர்ச்சி பெற்றவராக இருந்தார். அந்த நபர் ஆஸ் பின் வாயிலின் குடும்பத்தின் சார்பாக உடன்படிக்கை செய்து தனது கைகளால் அடித்து சத்தியம் செய்து கூறினார்.

மேலும் அவர் நிராகரிக்கும் குரைஷியைச் சார்ந்தவராக இருந்தார். பெருமானார் (ஸல்) அவர்களும், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) ஆகிய இருவரும் அந்த நபரை நம்பினார்கள். அவர் காஃபிராக இருந்தார். குரைஷிகளைச் சார்ந்தவராக இருந்தும் பெருமானார் (ஸல்) அவர்கள் அந்த நபரை நம்பினார்கள்.

எனவே தமது பயணத்தின் ஒட்டகங்களை அவரிடத்தில் ஒப்படைத்தார்கள். மேலும் அவரிடம் மூன்று நாட்களுக்குப் பிறகு காலை நேரத்தில் அந்த ஒட்டங்களுடன் சவ்ர் குகைக்கு வந்தடைய வேண்டும் என்று வாக்குறுதி வாங்கினார்கள். ஹஸ்ரத் ஆமிர் பின் ஃபுஹைரா (ரலி) அவர்களும், அந்த வழிகாட்டியும் இந்த இருவருடன் சென்றார்கள். அந்த வழிகாட்டி இந்த மூவரையும் கடல் ஓரம் வழியாக அழைத்துச் சென்றார். இந்த அறிவிப்பு புகாரியில் வந்துள்ளது.

(சஹீஹுல் புகாரி. கிதாப் மனாகிவுல் அன்ஸார், பாப் ஹிஜ்ரத்துந் நபி (ஸல்)..... ஹதீஸ் எண் **3905)**

சுராக்கா பின் மாலிக் பின் ஜுஃஷம் கூறி வந்தார்: அதாவது எங்களிடத்தில் நிராகரிக்கும் குரைஷிகளின் உளவு பார்க்கக்கூடியவர் வந்தார். பெருமானார் (ஸல்) மற்றும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) ஆகிய இருவரையும் கொலை செய்யவோ அல்லது கைது செய்யவோ முடிவு செய்துள்ளனர். அப்போது நான் எனது சமுதாயமான பனூ முத்லிஜின் ஒரு சபையில் அமர்ந்திருந்தேன். அப்போது அவர்களில் ஒரு நபர் முன்னால் வந்தார். அவர்களை எவ்வாறு சிறை பிடிக்கலாம் அல்லது கொலை செய்யலாம். மேலும் பெருமானார் (ஸல்) அவர்கள் மீது எவ்வாறு தாக்குதல் நடத்தலாம் என்றே பேசப்பட்டு வந்தது.

அன்னார் கூறுகின்றார்கள்: இந்த விஷயங்கள் சபையில் பேசப்பட்டு வந்தது. ஒரு நபர் வந்து எங்களுக்கு அருகில் நின்றார். நாங்கள் உட்கார்ந்திருந்தோம். அவர் கூறினார்: சுராக்கா! நான் இப்போது கடல் ஓரத்தில் சில நிழலைக் கண்டேன். மேலும் அது முஹம்மது (ஸல்) மற்றும் அவர்களுடன் இருப்பவர்களுடையதாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

அதற்கு சுராக்கா, அவர்கள்தான் என்று நான் அடையாளங்கண்டு கொண்டேன். ஆனால் நான் அவரிடம் ஒருபோதும் அவர்கள் இல்லை. மாறாக, நீங்கள் எங்கள் முன்னால் சென்ற இன்ன இன்ன நபரைக் கண்டுள்ளீர்கள் என்று கூறினார். இவ்வாறு அவரது பேச்சைக் கண்டுகொள்ளவில்லை. பிறகு நான் இந்த சபையில் சிறிது நேரம் இருந்தேன். சுராக்காவிற்குப் பேராசை இருந்தது. எனவே அந்த நபர் இவர்களுக்கு பின்னால் சென்று விடக்கூடாது. மேலும் அந்த வெகுமதிக்கு அவர் உரிமை படைத்தவராகக் கூடாது என்று கருதினார்.

எவ்வாறிருப்பினும் அவர் அந்த கூற்றிற்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. சிறிது நேரத்திற்குப் பிறகு அவர் எழுந்தார். வீட்டிற்குச் சென்று தமது அடிமைப் பெண்ணிடம், எனது குதிரையை இந்த இடத்தில் கட்டிப் போடுங்கள் என்று கூறித் தனது அம்பை எடுத்துக் கொண்டு வீட்டின் பின்புறமாக வெளியேறினார். அம்பின் மேற்புறத்தை கீழே நோக்கி வைத்தார். மேலும் இவ்வாறு தனது குதிரையை அடைந்தார். பிறகு அதில் பயணம் செய்தார்.

அவர் கூறுகின்றார்: நான் அதை தள்ளினேன். அதை ஓட வைத்தேன். இவ்வாறு அது என்னை ஓட்டிச் சென்றது. எதுவரை என்றால் நான் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு அருகில் சென்றபோது எனது குதிரை எந்த அளவுக்கு தடுமாறியது என்றால் நான் அதிலிருந்து விழுந்தேன். நான் எழுந்து நின்றேன். எனது கையை நீட்டி அம்பை எடுத்தேன். அதன் மூலம் அவர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்த முடியுமா? முடியாதா? என்று சகுனம் பார்த்தேன். அதாவது எனது எண்ணம் கொலை செய்வதா? அல்லது அவர்களை பிடிப்பதா? அதனை நான் செய்ய முடியுமா? அல்லது முடியாதா? என்று சகுனம் பார்த்தேன்.

அவர் கூறுகின்றார்: நான் எதை விரும்பவில்லையோ அதுதான் வெளிப்பட்டது. அதாவது நான் சகுனம் பார்த்தபோது என்னால் அவர்களைப் பிடிக்க முடியாது என்று எனக்கு எதிராக வெளிவந்தது.

அவர் கூறுகிறார்: பிறகு நான் எனது குதிரையில் பயணம் செய்தேன். என்ன முடிவு வந்ததோ அதற்கு எதிராகச் செயல்பட்டேன். குதிரை மீண்டும் என்னை அவர்களுக்கு அருகில் கொண்டு சென்றது. எந்த அளவுக்கு அருகில் சென்றேன் என்றால் பெருமானார் (ஸல்) அவர்கள் திருக்குர்ஆன் ஓதக் கேட்டேன். அன்னார் இங்கும் அங்கும் பார்க்கவில்லை.

ஆனால் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அதிகமாக இங்கும் அங்கும் திரும்பித் திரும்பி பார்த்தார்கள். பிறகு எனது குதிரையின் முன்னங் கால்கள் முட்டு வரை மண்ணில் புதைந்து விட்டது. பிறகு நான் கீழே விழுந்தேன். பிறகு நான் குதிரையைத் திட்டினேன். அது எழுந்து நின்றது. ஆனால் அதன் கால்களை மண்ணிலிருந்து எடுக்க முடியாமல் இருந்தது. இறுதியாக அது நேராக எழுந்து நின்று எந்த அளவுக்குக் காலை வேகமாக உதறியது என்றால் அதனால் கடுமையான மணல் காற்று வீசுவது போன்று அது வெளிப்பட்டது.

அவர் கூறுகின்றார்: பிறகு நான் மீண்டும் அம்பினால் சகுனம் பார்த்தேன். நான் எதை விரும்பினேனோ அதற்கு எதிராகவே மீண்டும் வந்தது. அதாவது நான் பெருமானார் (ஸல்) அவர்களைப் பிடிக்க முடியாது என்றே வந்தது. அப்போது நான் உரத்த குரலில் பெருமானார் (ஸல்) அவர்களிடம், நீங்கள் பாதுகாப்பில் இருக்கின்றீர்கள் என்று கூறினேன். பிறகு அவர்கள் நின்று விட்டார்கள். அதாவது எனக்கு இப்போது எந்த தீய எண்ணமும் கிடையாது.

அவர் கூறுகின்றார்: இப்போது நான் எனது குதிரையில் பயணம் செய்தவாறு அவர்களிடம் வந்தேன். எனது எண்ணம் சரியானதும் குதிரையும் செல்ல ஆரம்பித்தது. பெருமானார் (ஸல்) அவர்களிடம் குதிரை சென்றது. அல்லது அவர்கள் சிறிது தூரம் பின்னால் வந்தார்கள். அல்லது தமது இடத்திலேயே நின்றார்கள்.

அவர் கூறுகின்றார்: அவர்களைச் சென்றடைவதில் எனக்கு ஏற்பட்ட தடைகளைப் பார்த்து எனது உள்ளத்தில், நிச்சயமாக பெருமானார் (ஸல்) அவர்களது கூற்று மேலோங்கி நிற்கும் என்று தோன்றியது. நான் பெருமானார் (ஸல்) அவர்களிடம், உங்களது சமுதாயம் உங்களைக் கொலை செய்ய அல்லது கைது செய்ய முடிவு செய்துள்ளது. மக்கள் அவர்களுடன் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்று நினைத்தார்களோ அவை அனைத்தையும் நான் பெருமானார் (ஸல்) அவர்களிடம் கூறினேன். அதாவது அவர்களது தீய எண்ணங்களைப் பற்றி. நிராகரிப்பாளர்களின் முழு விவரங்களையும் கூறினேன்.

பிறகு நீங்கள் பயணத்தில் செல்கின்றீர்கள் என்று கூறி நான் அவர்களுக்கு முன் உணவிற்கான பொருட்களை கொடுத்தேன். ஆனால் அவர்கள் என்னிடமிருந்து அதைப் பெறவில்லை. பெருமானார் (ஸல்) அவர்கள் இதன் தேவையில்லை என்று கூறி நிராகரித்து விட்டார்கள். மேலும் வேறு எதுவும் தேவை என்றும் தமது விருப்பத்தை தெரிவிக்கவில்லை. ஆனால் பெருமானார் (ஸல்) அவர்கள் என்னிடம், எங்களது பயணம் குறித்து நாங்கள் எந்த பாதையில் செல்கின்றோம் என்று எவருக்கும் தெரிவிக்கக் கூடாது என்று கூறினார்கள்.

அவர் கூறுகின்றார்: நான் பெருமானார் (ஸல்) அவர்களிடம், தாங்கள் எனக்கு பாதுகாப்பிற்கான உத்திரவாதத்தை எழுதித் தாருங்கள் என்று விண்ணப்பித்தேன். பெருமானார் (ஸல்) அவர்கள் அடிமையாக இருந்து பிறகு விடுதலையான ஆமிர் பின் ஃபுஹைரா (ரலி) அவர்களிடம் எழுதுங்கள் என்று கூறினார்கள். மேலும் அவர்கள் தோலினாலான ஒரு துண்டில் எழுதினார்கள். இதற்குப் பிறகு அன்னார் அங்கிருந்து சென்றார்கள்.

இப்னு ஷஹாபின் அறிவிப்பு இவ்வாறு வருகிறது: உர்வா பின் ஸுபைர் என்னிடம் கூறினார். அதாவது பெருமானார் (ஸல்) அவர்கள் வழியில் ஹஸ்ரத் சுபைரைச் சந்தித்தார்கள். அவர் முஸ்லிம்களின் ஒரு குழுவுடன் சிரியாவில் வியாபாரம் செய்து விட்டுத் திரும்பி வந்து கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் சுபைர் அவர்கள் பெருமானார் (ஸல்) மற்றும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) ஆகியோருக்கு வெள்ளை நிற ஆடையை அணிவித்தார்கள். மேலும் மதீனாவின் முஸ்லிம்களிடமிருந்து பெருமானார் (ஸல்) அவர்கள் வெளியேறிவிட்டார்கள் என்று செவியேற்றிருந்தார்கள்.

எனவே அவர் ஒவ்வொரு காலையிலும் ஹர்ரா மைதானம் வரை வருவார்கள். அங்கு அன்னாருக்காகக் காத்திருப்பார்கள். எதுவரை என்றால் மதிய வேளையின் வெயிலானது அவர்களை திரும்பிச் செல்ல வைத்தது. அதாவது மதியம் வரை காத்திருப்பார்கள். எப்போது பெருமானார் (ஸல்) அவர்கள் மதீனா வருகை தருவார்கள் என்று காத்திருந்தவாறு கடுமையான வெயில் வந்த பிறகு வெயிலின் காரணமாக மீண்டும் திரும்பிச் சென்று விடுவார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: ஒரு நாள் நீண்ட நேரம் காத்திருந்த பிறகு தமது வீட்டிற்குத் திரும்பியபோது ஒரு யூதர் தமது வீட்டில் மேற்பகுதியில் ஏதோ ஒன்றைப் பார்ப்பதற்காக மேலே ஏறினார். அவர் பெருமானார் (ஸல்) அவர்களையும், அவர்களுடன் வந்தவர்களையும் பார்த்து விட்டார். அவர்கள் வெள்ளை நிற ஆடையை அணிந்திருந்தார்கள்.

அந்த யூதரால் தன்னை கட்டுப்படுத்திக் கொள்ள இயலாமல் உரத்த குரலில் மதீனா வாசிகளிடம், அரபு மக்களே! நீங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்ற அந்த தலைவர் இவர்தான். முஸ்லிம்கள் தினமும் சென்று அன்னாரின் வருகைக்காக ஓரிடத்தில் காத்திருப்பார்கள் என்று அவருக்குத் தெரியும்.

அவர் கூறியதைக்கேட்ட உடனே முஸ்லிம்கள் எழுந்து தமது ஆயுதங்களை எடுத்தவாறு ஹர்ரா மைதானத்தில் பெருமானார் (ஸல்) அவர்களை வரவேற்றார்கள். அன்னார் அவர்களை தம்முடன் அழைத்துக் கொண்டு தமது வலப்பக்கத்தில் திரும்பினார்கள். மேலும் பனீ அம்ர் பின் அவ்ஃபின் முஹல்லாவில் அவர்களுடன் இறங்கினார்கள். மேலும் அது திங்கட்கிழமை நாளாகவும், ரபீவுல் அவ்வல் மாதமாகவும் இருந்தது.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) மக்களைச் சந்திப்பதற்காக நின்றார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் அமைதியாக உட்கார்ந்திருந்தார்கள். அன்ஸாரைச் சார்ந்தவர்களில் பெருமானார் (ஸல்) அவர்களைக் கண்டிராதவர்கள் வந்து அபூபக்ர் அவர்களுக்கு சலாத்தை கூறினர். எதுவரை என்றால் வெயில் பெருமானார் (ஸல்) அவர்கள் மீது பட்டது. அதாவது நீண்ட நேரம் ஆகிவிட்டது. வெயில் அன்னார் மீது பட்டது.

எனவே அபூபக்ர் (ரலி) அவர்கள் தமது போர்வையினால் அன்னாரை மறைத்தார்கள். அப்போது மக்கள் பெருமானார் (ஸல்) அவர்களை அடையாளங்கண்டு கொண்டார்கள். பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் பனூ அமர் பின் அவ்ஃபின் முஹல்லாவில் பத்திற்கு அதிகமான இரவைக் கழித்தார்கள்.

மேலும் பிறகு இறையச்சத்தை அடிப்படையாகக் கொண்டு கட்டப்பட்ட அந்த பள்ளிவாசலில் பெருமானார் (ஸல்) அவர்கள் தொழுதார்கள். பிறகு அன்னார் ஒட்டகத்தில் பயணம் செய்தார்கள். மக்கள் அன்னாருடன் நடந்து வந்தார்கள். மதீனாவில் மஸ்ஜிது நபவி பள்ளிவாசல் தற்போது இருக்கின்ற அந்த இடத்திற்குச் சென்று ஒட்டகம் அமர்ந்து விட்டது. அன்றைய நாட்களில் சில முஸ்லிம்கள் அங்கு தொழுது வந்தனர். அது சுஹைல் மற்றும் சஹல் ஆகியோரது பேரீத்தம் பழத்தை காய வைக்கும் இடமாக இருந்தது. அது ஒரு பரந்த மைதானமாகும். அங்கு அந்த இரண்டு அனாதை குழந்தைகள் பேரீத்தம் பழத்தைக் காய வைத்து வந்தனர். இந்த குழந்தைகளை ஹஸ்ரத் சஅது பின் ஸுராரா வளர்த்து வந்தார்.

அன்னாரது ஒட்டகம் அன்னாரை அங்கு அமரச் செய்தது. அப்போது பெருமானார் (ஸல்) அவர்கள், அல்லாஹ் விரும்பினால் நமது தங்குமிடம் இதுவாகவே இருக்கும் என்று கூறினார்கள்.

பிறகு அன்னார் அந்த இரண்டு சிறுவர்களையும் அழைத்து அந்த இடத்தை பள்ளிவாசலாகக் கட்டுவதற்காக அதன் தொகையை கேட்டார்கள். அதற்கு அந்த குழந்தைகள் அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நாங்கள் இந்த இடத்தை இலவசமாக தருகிறோம் என்று கூறினர். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள் அவர்களிடம் அந்த நிலத்தை இலவசமாக வாங்க மறுத்து விட்டார்கள். மேலும் அவர்களிடம் அந்த நிலத்தை விலைக்கு வாங்கி பள்ளிவாசலை கட்டினார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்கள் அந்த பள்ளிவாசலைக் கட்டுவதற்காக மக்களுடன் இணைந்து செங்கலை எடுத்து வந்தார்கள். செங்கலை எடுத்து வரும்போது,

هٰذَا الْحِمَالُ لَا حِمَالَ خَيْبَرْ    هٰذَا اَبَرُّ رَبَّنَا وَاَطْهَرْ

அதாவது இதன் எடை ஹைபரைப் போன்ற எடை கிடையாது. மாறாக, எங்களுடைய இறைவா! இந்த எடை மிகவும் நன்மையானதும், தூய்மையானதும் ஆகும் என்று கூறினார்கள். மேலும் கூறினார்கள்:

اَللّٰهُمَّ اِنَّ الْاَجْرَ اَجْرُ الْاٰخِرَةْ    فَارْحَمِ الْاَنْصَارَ وَالْمُهَاجِرَةْ

அதாவது அல்லாஹ்வே! உண்மையான நற்கூலி மறுமையில் கிடைக்கக்கூடிய நற்கூலியே ஆகும். எனவே நீ அன்ஸார் மற்றும் முஹாஜிரீன் மீது கருணை காட்டுவாயாக.

இதுவும் புகாரியின் அறிவிப்பாகும்.

(சஹீஹுல் புகாரி, கிதாப் மனாகிபுல் அன்ஸார், பாப் ஹிஜ்ரத்துந் நபி (ஸல்)..... ஹதீஸ் எண் **3906**)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஹிஜ்ரத் சம்பவம் தொடர்பாகவும் எழுதியுள்ளார்கள். அன்னார் இதனை பல்வேறு கோணங்களில் தமக்கே உரிய பாணியில் எடுத்துக் கூறியுள்ளார்கள். எனவே இந்த விளக்கத்தையும் நான் சிறிதளவு எடுத்துக் கூறுகிறேன்.

அன்னார் எழுதுகின்றார்கள்: இறுதியாக மக்கா முஸ்லிம்களே இல்லாமல் ஆகிவிட்டது. சில அடிமைகளும், பெருமானார் (ஸல்), ஹஸ்ரத் அபூபக்ர், ஹஸ்ரத் அலி ஆகியோர் மக்காவில் இருந்தார்கள். மக்கத்து வாசிகள், வேட்டை நமது கையை விட்டுக் கைநழுவுகிறது என்பதைக் கண்டபோது தலைவர்கள் ஒன்று கூடி ஆலோசனை செய்து, பெருமானார் (ஸல்) அவர்களைக் கொலை செய்து விடுவதே சரியாக இருக்கும் என்று அவர்கள் முடிவு செய்தார்கள்.

இறைவனது குறிப்பான திட்டத்திற்கிணங்க அன்னாரைக் கொலை செய்வதற்காக நிர்ணயிக்கப்பட்ட தேதியும், அன்னார் ஹிஜ்ரத் செய்த தேதியும் ஒன்றாக அமைந்திருந்தது. மக்கத்து மக்கள் அன்னாரைக் கொலை செய்வதற்காக அன்னாரது வீட்டிற்கு முன்னால் ஒன்று கூடிக் கொண்டிருந்தபோது, அன்னார் இரவின் இருளில் ஹிஜ்ரத் செய்யும் எண்ணத்தில் தமது விட்டை விட்டு வெளியேறினார்கள். ஒருபுறம் நிராகரிப்பாளர்கள் ஒன்று கூடிக் கொண்டிருந்தார்கள். மறுபக்கம் அல்லாஹ் அன்னாருக்கு வழிகாட்டினான். அப்போதே அன்னார் வெளியேறினார்கள்.

நிச்சயமாக மக்கத்து மக்கள் தங்களது எண்ணம் குறித்து முஹம்மது (ஸல்) அவர்களுக்குக் தெரிந்திருக்கும் என்று சந்தேகிக்கலாம். ஆனால் இருந்தும் அன்னார் அவர்களுக்கு முன்பாகவே அவர்களைக் கடந்து சென்றார்கள். அப்போது அவர்கள் இது வேறு யாரோ என்று எண்ணி அன்னாரைக் கண்டு ஒளிந்தனர். ஏனென்றால் இவர் சென்று பெருமானார் (ஸல்) அவர்களிடம் நாம் ஒன்று கூடி இருக்கின்றோம் என்று தமது நோக்கத்தைப் பற்றித் தெரிவித்து விடக்கூடாது என்பதற்காக ஒளிந்தனர்.

அன்னார் எழுதுகின்றார்கள்: அன்றைய இரவின் முந்தைய நாளே ஹிஜ்ரத் செய்யவதற்காக அபூபக்ர் (ரலி) அவர்களுக்குத் தகவல் கொடுக்கப்பட்டு விட்டது. எனவே அவர்களும் அன்னாருடன் வந்து இணைந்து விட்டார்கள். இருவரும் இணைந்து சிறிது நேரத்திலேயே மக்காவிலிருந்து செல்ல ஆரம்பித்தனர். மக்காவிலிருந்து மூன்று நான்கு மைல் தொலைவிலுள்ள சவ்ர் என்ற பெயருடைய மலையின் ஒரு குகையில் தஞ்சம் புகுந்தார்கள்.

மக்கத்து மக்களுக்கு பெருமானார் (ஸல்) அவர்கள் மக்காவிலிருந்து சென்று விட்டார்கள் என்பது தெரிய வந்தபோது, அவர்கள் ஒரு படையை ஒன்று திரட்டி அன்னாரைப் பின் தொடர்ந்தார்கள். அவர்களைத் தேடுவதற்காக ஒரு நபரையும் தம்மோடு வைத்திருந்தார்கள். அவன் அன்னார் தேடியவாறு சவ்ர் மலையை சென்றடைந்தார். அபூபக்ர் (ரலி) அவர்கள் மறைந்திருந்த அந்த மலையை சென்றடைந்த அவன், முஹம்மது (ஸல்) அவர்கள் இங்குதான் இருக்க வேண்டும். அல்லது வானத்திற்கு ஏறிச் சென்றிருக்க வேண்டும் என்று நிச்சய உறுதியுடன் கூறினான்.

அவனது அறிவிப்பைக் கேட்டு அபூபக்ர் (ரலி) அவர்களின் உள்ளம் அமர்ந்து விட்டது. அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களிடம், எதிரி நமக்கு அருகில் வந்து விட்டான். இன்னும் சற்று நேரத்தில் இந்த குகைக்குள் நுழைந்து விடுவான் என்று கூறினார்கள். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், لَا تَحْزَنْ اِنَّ اللّٰهَ مَعَنَا அதாவது அபூபக்ரே! அஞ்சாதீர். இறைவன் நம் இருவருடன் இருக்கின்றான் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், நபிகள் நாயகம் (ஸல்) அவர்களே! நான் எனது உயிருக்கு அஞ்சவில்லை. ஏனென்றால், நான் ஒரு சாதாரண மனிதனாவேன். நான் கொல்லப்பட்டு விட்டால் ஒரு மனிதர்தான் கொல்லப்படுவார். ஆனால் உங்களது உயிருக்கு ஏதும் பங்கம் ஏற்பட்டால் உலகத்திலிருந்து ஆன்மீகத்தின் பெயரே அழிந்து விடும் என்பதே எனது அச்சமாகும் என்று கூறினார்கள்.

அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், எந்த கவலையும் இல்லை. இங்கு நாம் இருவர் மட்டுமல்ல. மூன்றாவதாக இறைவனும் நம்முடன் இருக்கின்றான். ஏனென்றால் இப்போது இஸ்லாத்தைப் பரப்ப வேண்டும். மேலும் முன்னேற்றத்தை வழங்க வேண்டும் என்று இறைவன் விரும்புகின்றான். மக்கத்து மக்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட அந்த நேரம் முடிந்து விட்டது என்று கூறினார்கள்.

இறுதியாக இறைவன் மக்கத்து மக்களின் கண்களில் திரையைப் போட்டான். பிறகு அவர்கள் தேடி வந்த அந்த நபரை எள்ளிநகையாடினர். மேலும் அவரிடம், அவர்கள் இந்த பரந்த இடத்திலா அடைக்கலம் அடைந்திருப்பார்கள்? இது அடைக்கலம் பெறக்கூடிய இடம் கிடையாது. மேலும் இந்த இடத்தில் அதிகமான பாம்புகள் இருக்கின்றன. அறிவு படைத்த எவராவது அடைக்கலம் இங்கு தேடி வருவாரா என்று கூறினர். அந்த குகையை அவர்கள் குனிந்து பார்ப்பதற்குப் பகரமாக தேடி வந்த அந்த நபரை அவர்கள் எள்ளிநகையாடியவாறு திரும்பிச் சென்றனர்.

இந்தக் குகையில் காத்திருந்தவாறு ஏற்கனவே திட்டமிட்டிருந்தபடி இரவு நேரத்தில் பயணம் செய்வதற்கான சவாரிகள் கொண்டு வரப்பட்டன. மிக வேகமாகச் செல்லக்கூடிய இரண்டு ஒட்டகத்தில் பெருமானார் (ஸல்) அவர்களும், அன்னாருடன் இருந்தவர்களும் சென்றனர்.

ஓர் ஒட்டகத்தில் பெருமானார் (ஸல்) அவர்களும், வழிகாட்டக்கூடிய நபரும் இருந்தார். மற்றோர் ஒட்டகத்தில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) மற்றும் அவர்களின் பணியாளரான ஆமிர் பின் ஃபுஹைரா (ரலி) அவர்களும் பயணம் செய்தார்கள். மதீனாவை நோக்கிப் பயணம் செய்வதற்கு முன்பாக பெருமானார் (ஸல்) அவர்கள் மக்காவை நோக்கி தமது முகத்தை திருப்பினார்கள். இந்த கண்ணியத்திற்குரிய நகரத்தில் அன்னார் பிறந்தார்கள். மேலும் அதில் தோன்றினார்கள். மேலும் இதில் ஹஸ்ரத் இஸ்மாயீல் (அலை) அவர்களது காலத்திலிருந்து அன்னாரது குடும்பம் வசித்து வந்தது.

அன்னார் தமது இறுதிப் பார்வையை செலுத்தியவாறு, ஏக்கத்துடன் அந்த நகரத்தை நோக்கி, மக்கா நகரமே! நீ எல்லா இடங்களை விடவும் எனக்கு அதிக விருப்பத்திற்குரிய இடமாவாய். ஆனால் உன்னுடைய மக்கள் என்னை இங்கு இருக்க விடவில்லை என்று கூறினார்கள்.

அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும் வருத்தத்துடன், இந்த மக்கள் தமது நபியை வெளியேற்றியுள்ளனர். இப்போது நிச்சயமாக இவர்கள் அழிவிற்கு ஆளாவார்கள் என்று கூறினார்கள்.

மக்கத்து மக்கள் அன்னாரைக் கண்டு பிடிப்பதில் தோல்வியைக் கண்ட பிறகு, எவரொருவர் முஹம்மது (ஸல்) அவர்கள் அல்லது அபூபக்ரை உயிரோடு அல்லது மரணித்தவராக கொண்டு வந்தால் அவருக்கு நூறு ஒட்டகம் பரிசாக கொடுக்கப்படும் என்ற அறிவிப்பைச் செய்தார்கள். இந்த அறிவிப்புச் செய்தி மக்காவிற்கு அருகிலுள்ள மற்ற இதர கோத்திரத்தினருக்கும் அனுப்பப்பட்டது.

எனவே காட்டரபிகளின் தலைவரான சுராக்கா பின் மாலிக் வெகுமதியின் மீது கொண்ட பேராசையில் அன்னாரை பின் தொடர்ந்தார். அன்னாரைத் தேடியவாறு மதீனாவின் வீதியில் அன்னாரைச் சந்தித்தார். அவன் இரண்டு ஒட்டகத்தையும், அதில் பயணம் செய்யக் கூடியவர்களையும் பார்த்து தமது ஒட்டகத்தை அவர்களுக்கு பின்னால் ஓட்டிச் சென்றார். ஆனால் வழியில் அவரது குதிரை வேகமாக தடுமாறி கீழே விழுந்தது. சுராக்காவும் கீழே விழுந்தார். சுராக்கா பின் நாட்களில் முஸ்லிம் ஆனார். இந்த சம்பவத்தைப் பற்றி அவரே குறிப்பிடுகின்றார்.

(தீபாச்சா தஃப்ஸீருல் குர்ஆன், அன்வாருல் உலூம் தொகுதி 20 பக்கம் 222–224)

மேலும் பிறகு நடந்த அனைத்து சம்பவங்கள் பற்றி முன்பே கூறப்பட்டு விட்டது.

சுராக்கா தொடர்பாக ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் எழுதுகின்றார்கள்:

ஆமிர் பின் ஃபுஹைரா (ரலி) அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களது கூற்றிற்கேற்ப அமைதிக்கான உத்திரவாத்தை எழுதி சுராக்காவிடம் கொடுத்தார்கள். சுராக்கா திரும்பியபோது அல்லாஹ் சுராக்காவின் வருங்காலத்தைப் பற்றிய நிலைமைகளைப் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு வெளிப்படுத்திக் காட்டினான்.

பெருமானார் (ஸல்) அவர்களுக்கு சுராக்காவின் வருங்காலத்தின் நிலைமைகள் எவ்வாறிருக்கும் என்பது பற்றி அல்லாஹ் வெளிப்படுத்திக் காட்டியதற்கிணங்க, அன்னார் சுராக்காவிடம், சுராக்காவே! கிஸ்ராவின் தங்கக் காப்புகள் உமது கைகளில் அணிவிக்கப்படும்போது உமது நிலை எவ்வாறிருக்கும் என்று கூறினார்கள். சுராக்கா வியப்புடன், ஈரானின் அரசர் கிஸ்ராவா? என்று கேட்க, பெருமானார் (ஸல்) அவர்கள், ஆம்! என்று பதிலளித்தார்கள். அன்னாரது இந்த முன்னறிவிப்பு 16,17 வருடங்களுக்குப் பிறகு சொல்லுக்கு சொல் நிறைவேறியது. சுராக்கா முஸ்லிமாகி மதீனா வந்தார்.

ஹஸ்ரத் பெருமானார் (ஸல்) அவர்களது மரணத்திற்குப் பிறகு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி), பிறகு ஹஸ்ரத் உமர் (ரலி) கலீஃபாவானார்கள். முஸ்லிம்களின் கண்ணியம் வளர்ந்து கொண்டிருப்பதைக் கண்ட ஈரானைச் சார்ந்தவர்கள் முஸ்லிம்கள் மீது தாக்குதல் தொடுக்க ஆரம்பித்தனர். அவர்கள் இஸ்லாத்தை நசுக்குவதற்கு பகரமாக தாமே இஸ்லாத்திற்கு எதிரில் நசுக்கப்பட்டனர். ஈரானிகள் தாக்குதலை ஆரம்பித்தனர்.

இறுதியாக கிஸ்ராவின் ஆட்சி முஸ்லிம் படைகளின் முன் வீழ்ந்தது. மேலும் ஈரானின் செல்வங்கள் முஸ்லிம்களின் கட்டுப்பாட்டில் வந்தன. செல்வங்களில் முஸ்லிம்களின் கட்டுப்பாட்டில் வந்த ஈரானிய அரசாங்கத்தின் ஈரானின் அரசர் கிஸ்ரா தமது வழக்கத்திற்கேற்ப அரியணையில் அமரும்போது அணியக்கூடிய அந்த தங்கக் காப்பும் இருந்தது.

சுராக்கா முஸ்லிமான பிறகு பெருமானார் (ஸல்) அவர்களின் ஹிஜ்ரத்தின்போது நடைபெற்ற இந்த சம்பவத்தை முஸ்லிம்களிடம் பெருமையுடன் எடுத்துக் கூறி வந்தார்கள். மேலும் பெருமானார் (ஸல்) அவர்கள் சுராக்காவை நோக்கி, சுராக்காவே! உமது கைகளில் கிஸ்ராவின் தங்கக் காப்புகள் அணிவிக்கப்படும்போது உமது நிலை எவ்வாறிருக்கும் என்று கூறிய விஷயத்தையும் முஸ்லிம்கள் அறிந்திருந்தனர்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு முன்னால் போர் செல்வங்கள் கொண்டு வரப்பட்டு வைக்கப்பட்டது. அப்போது கிஸ்ராவின் தங்கக் காப்பை பார்த்ததும் ஹஸ்ரத் உமர் அவர்களுக்கு அந்த அனைத்து சம்பவங்களும் கண் முன்னே வந்தன.

அதாவது அந்த பலவீனமான நேரத்தில் இறைவனது தூதர் தமது நாட்டை விட்டு மதீனா செல்ல நேரிட்டது. மேலும் சுராக்கா அன்னாரைக் கொன்றோ அல்லது உயிரோடு பிடித்தோ மக்கத்து மக்களிடம் கொடுத்து நூறு ஒட்டகத்தை பரிசாகப் பெற வேண்டும் என்ற எண்ணத்தில் குதிரையை வேகமாக ஓட்டியது, அப்போது பெருமானார் (ஸல்) அவர்கள், சுராக்கா! உமது கைகளில் கிஸ்ராவின் தங்கக் காப்புகள் அணிவிக்கப்படும்போது உமது நிலை எவ்வாறிருக்கும் என்று கூறியது, இது எத்தகைய பெரிய முன்னறிவிப்பு. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தமக்கு முன்னால் கிஸ்ராவின் காப்புகளைக் கண்டபோது இறைவனது வல்லமை

மீண்டும் அவர்களது கண்களுக்கு முன்னால் வந்தது. அவர்கள் சுராக்காவை அழையுங்கள் என்று கூறினார்கள். சுராக்கா அழைக்கப்பட்டார். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், கிஸ்ராவின் தங்கக் காப்புகளை தமது கைகளில் அணியுமாறு கட்டளையிட்டார்கள். அதற்கு சுராக்கா, இறைவனது தூதரின் கலீஃபாவே! தங்கம் அணிவது முஸ்லிம்களுக்குத் தடுக்கப்பட்டதாகும் என்று கூறினார்கள்.

அதற்கு உமர் அவர்கள், தடுக்கப்பட்டதுதான். சரிதான். ஆண்கள் தங்கம் அணிவது தடுக்கப்பட்டதுதான். ஆனால் இந்த சந்தர்ப்பத்திற்காக அல்ல. இது தடுக்கப்பட்ட சந்தர்ப்பம் கிடையாது. அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு உங்களது கையில் தங்கக் காப்புகளைக் காட்டினான். நீங்கள் இந்த தங்கக் காப்புகளை அணிகின்றீர்களா? அல்லது நான் உங்களுக்கு தண்டனை தரட்டுமா? ஏனென்றால் தற்போது இந்த முன்னறிவிப்பு நிறைவேறியுள்ளது. இப்போது இதன் எஞ்சிய பகுதியையும் நீங்கள் நிறைவேற்ற வேண்டும் என்று கூறினார்கள்.

சுராக்கா ஆட்சேபித்ததன் காரணம், ஷரீஅத் விவகாரத்தின் காரணமாகவே இருந்தது. இல்லையென்றால் அவர்களும் கூட பெருமானார் (ஸல்) அவர்களது முன்னறிவிப்பு நிறைவேறுவதை காண்பதற்கு விருப்பமுடையவராகவே இருந்தார். சுராக்கா தமது கையில் அந்த தங்கக் காப்பை அணிந்தார். மேலும் முஸ்லிம்கள் இந்த வியக்கத்தக்க முன்னறிவிப்பு முழுமையானதை தமது கண்களால் கண்டார்கள்.

(தீபாச்சா தஃப்ஸீருல் குர்ஆன், அன்வாருல் உலூம் தொகுதி 20 பக்கம் 222–226)

சில புத்தகத்தின் அடிப்படையில் சுராக்கா பின் மாலிக் அவர்களுக்கு கிஸ்ராவின் தங்கக் காப்பு அணிவிக்கப்படுவது என்ற சொல்லை அன்னார் ஹிஜ்ரத்தின் சந்தர்ப்பத்தில் கூறவில்லை. மாறாக, நபி (ஸல்) அவர்கள் ஹுனைன் மற்றும் தாயிபிலிருந்து திரும்பி வரும்போது ஜிஃரானா என்ற இடத்தில் கூறியதாக வருகிறது.

(புகாரி பஷரஹுல் கர்மானி பாகம் 14 பக்கம் 178, கிதாபுல் ஹுல்க், பாப் அலாமாத்து ஃபில் இஸ்லாம் ஹதீஸ் எண் 3384 – 1981 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஆனால் அறிவிப்புகளில் பொதுவாக ஹிஜ்ரத்தின் சந்தர்ப்பதில் தான் கூறியதாக வருகிறது. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களும் இதனையே எழுதியுள்ளார்கள்.

ஹஸ்ரத் ஆமிர் பின் ஃபுஹைரா (ரலி) அவர்கள் ஹிஜ்ரத் செய்து மதீனா வந்து நோயுற்றார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் துஆ செய்ததினால் அவர்கள் நலமடைந்தார்கள்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: பெருமானார் (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத் செய்து மதீனா சென்றபோது சில சஹாபாக்கள் நோயுற்றார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி), ஹஸ்ரத் ஆமர் பின் ஃபஹைரா (ரலி) மற்றும் ஹஸ்ரத் பிலால் (ரலி) ஆகியோரும் நோயுற்றார்கள்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அவர்களை நலம் விசாரிக்கச் செல்வதற்குப் பெருமானார் (ஸல்) அவர்களிடம் அனுமதி வேண்டினார்கள். அன்னார் அனுமதி வழங்கினார்கள். ஹஸ்ரத் ஆயிஷா (ரலி), அபூபக்ர் (ரலி) அவர்களிடம், நீங்கள் எப்படி இருக்கின்றீர்கள்? என்று கேட்டதற்கு அன்னார் இந்த கவிதையை பதிலாக கூறினார்கள்:

كُلُّ امْرِءٍ مُصَبَّحٌ فِيْ أَهْلِهِ      وَالْمَوْتُ أَدْنَى مِنْ شِرَاكِ نَعْلِهِ

அதாவது ஒவ்வொரு நபரும் காலையில் எழும்போது காலை சிறந்ததாக அமையட்டும் என்று கூறப்படுகிறது. அவர் எத்தகைய நிலைமையில் இருக்கிறார் என்றால் அவர் தூங்கி எழும்போது ஒருநாள் இல்லை ஒருநாள் நிச்சயமாக மரணம் வந்தே தீரும் என்று கூறினார்கள்.

பிறகு அவர்கள் ஆமிர் பின் ஃபுஹைராவிடம் அவர்களது நிலைமையை கேட்டறிந்தார்கள். அதற்கு அவர்கள் இந்த கவிதையை படித்தார்கள்:

إِنِّيْ وَجَدْتُ الْمَوْتَ قَبْلَ ذَوْقِهِ      إِنَّ الْجَبَانَ حَتْفُهُ مِنْ فَوْقِهِ

அதாவது நிச்சயமாக நான் மரணத்தின் சுவையைச் சுவைப்பதற்கு முன்பாகவே அதைப் பெற்று விட்டேன். நிச்சயமாக கோழையின் மரணம் திடீரென்று வருகிறது. தைரியமானவர் எப்போதும் மரணத்திற்கு ஆயத்தமாகவே இருக்கின்றார். ஆனால் கோழை அதற்காக எவ்வித ஆயத்தமும் செய்யாமல் இருக்கின்றார்.

பிறகு அவர்கள் ஹஸ்ரத் பிலால் அவர்களிடம் சென்று அவர்களது நிலைமையை கேட்டறிந்தார்கள். அதற்கு அவர்கள் இந்த கவிதையை படித்தார்கள்:

يَا لَيْتَ شِعْرِيْ هَلْ أَبِيْتَنَّ لَيْلَةً      بِفَجٍّ وَحَوْلِيْ إِذْخِرٌ وَّجَلِيْلُ

அதாவது அந்தோ! நான் மக்காவின் பள்ளத்தாக்கில் எனது நாள்களின் ஏதாவதொரு இரவைக் கழிப்பேன் என்று தெரிந்திருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்.

பிறகு அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களிடம் வந்து அந்த சஹாபாக்களின் கூற்றை எடுத்துக் கூறினார்கள். அதாவது அபூபக்ர் (ரலி) அவர்கள் இதைக் கூறினார்கள்; ஆமிர் பின் ஃபுஹைரா (ரலி) அவர்கள் இதைக் கூறினார்கள். ஹஸ்ரத் பிலால் (ரலி) இதைக் கூறினார்கள். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள் வானத்தை நோக்கி பார்த்து இந்த துஆவை செய்தார்கள்:

اَللّٰهُمَّ حَبِّبْ إِلَيْنَا الْمَدِيْنَةَ كَمَا حَبَّبْتَ إِلَيْنَا مَكَّةَ أَوْ أَشَدَّ۔ اَللّٰهُمَّ بَارِكْ لَنَا فِيْ صَاعِهَا وَفِيْ مُدِّهَا وَانْقُلْ وَبَاءَهَا إِلَى مَهْيَعَةَ۔

அதாவது அல்லாஹ்வே! மக்காவை எங்களுக்கு பிடித்தமானதாக ஆக்கியது போன்று மதீனாவையும் நீ ஆக்குவாயாக. மேலும் அதை விட அதிகமாக ஆக்குவாயாக. அல்லாஹ்வே! இதிலுள்ள சாஃ மற்றும் முத்தில் (இது அளவு கோல்களாகும்) எங்களுக்கு பரக்கத் செய்வாயாக. மேலும் மதீனாவை எங்களுக்கு ஆரோக்கியமான இடமாக ஆக்குவாயாக. மேலும் இந்த நோயை எங்களை விட்டும் தொலைவில் எடுத்துச் செல்வாயாக.

(முன்னது அஹ்மது பின் ஹம்பல் தொகுதி 10 பக்கம் 101–102 ஹதீஸ் எண் 25092, முஸ்னது ஆயிஷா (ரலி) – 2008 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் ஆமிர் பின் ஃபுஹைரா (ரலி) பிஃரே மவூனா சம்பவத்தில் ஷஹீதானார்கள். அந்த மக்கள் கொல்லப்பட்டபோது ஹஸ்ரத் அம்ர் பின் உமய்யா ஸமரய் கைது செய்யப்பட்டார்கள். ஆமிர் பின் துஃபல் இவர்களிடம், இது யார் என்று கேட்டார்கள். அதற்கு அவர் ஒருவரைப் பார்த்து சைகை செய்தவாறு இது ஆமிர் பின் ஃபுஹைரா (ரலி) என்று பதிலளித்தார்கள்.

ஆமிர் பின் துஃபைல் அவர்கள் கூறினார்கள்: நான் ஆமிர் பின் ஃபுஹைராவைப் பார்த்தேன். அவர்கள் கொல்லப்பட்ட பிறகு வானத்திற்கு உயர்த்தப்பட்டார்கள். எதுவரை என்றால் வானம் அவர்களுக்கும் பூமிக்கும் இடையில் இருப்பதைப் போன்றும் அவர்கள் பூமியில் இறக்கப்படுவதைப் போன்றும் நான் இப்போதும்

பார்க்கின்றேன். பெருமானார் (ஸல்) அவர்களுக்கு அவர்களைப் பற்றிய செய்தி கிடைத்தது. எனவே பெருமானார் (ஸல்) அவர்கள் அவர்கள் கொல்லப்பட்ட செய்தியை சஹாபாக்களுக்கு தெரிவித்தார்கள்.

மேலும் கூறினார்கள்: உங்களது நண்பர் ஷஹீதாகி விட்டார். மேலும் அவர் தனது இறைவனிடம், எங்கள் இறைவா! எங்கள் தொடர்பாக நாங்கள் உன்னிடம் மகிழ்ச்சியாக இருக்கின்றோம். மேலும் நீ எங்களுடன் மகிழ்ச்சியாக இருக்கின்றாய் என்று எங்களது சகோதரர்களுக்கு தெரிவிப்பாயாக என்று துஆ செய்தார்கள். எனவே அல்லாஹ்வும் அவர்களைப் பற்றி தெரிவித்தான்.

(சஹீஹுல் புகாரி, கிதாபுல் மகாஸி, பாப் கஸ்வா ரஜீஹ்.... ஹதீஸ் எண் 4093)

இதுவும் புகாரியின் அறிவிப்பாகும். மற்றவர்களுக்கும் அல்லாஹ் இந்த காட்சியைக் காட்டினான். ஹஸ்ரத் ஆமிர் (ரலி) அவர்களுக்கும் பெருமானார் (ஸல்) அவர்களுக்கும் எவ்வாறு இந்த செய்தி தெரிய வந்தது. மற்றும் ஹஸ்ரத் ஆமிர் பின் ஃபுஹைரா (ரலி) அவர்களை யார் ஷஹீதாக்கினான் என்பது பற்றி கருத்துவேறுபாடுகள் இருக்கின்றன. சில அறிவிப்புகளில், இந்த விஷயத்தை கூறிய ஆமிர் பின் துஃபைல்தான் அன்னாரை ஷஹீதாக்கினார் என்று வருகிறது.

(அல் இஸ்திஆப் தொகுதி 2 பக்கம் 796 ஆமிர் பின் ஃபஹைரா (ரலி) – 1992 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஜைலில் அச்சிடப்பட்டது)

மற்றோர் அறிவிப்பில் ஜப்பார் பின் சல்மி ஷஹீதாக்கியதாக வருகிறது. எவ்வாறிருப்பினும் பேரே மவூனாவில் அன்னார் ஷஹீதானார்கள்.

(அல் இஸ்திஆப் தொகுதி 1 பக்கம் 229,230 ஜப்பார் பின் சலமா (ரலி) – 1992 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஜைலில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஆமிர் பின் ஃபுஹைராவின் ஷஹாதத் சம்பவத்தைப் பற்றி எடுத்துக் கூறியவாறு எழுதுகின்றார்கள்:

பாருங்கள்! இஸ்லாம் வாளின் பலவந்தத்தால் வெற்றி பெறவில்லை. மாறாக, இஸ்லாம் உயர்ந்த போதனைகளின் மூலமாக வெற்றி பெற்றது. அது உள்ளத்தில் இறங்கியது. மேலும் நல்லொழுக்கத்தில் ஓர் உயர்தரமான மாற்றத்தை உருவாக்கி விடுகிறது.

ஒரு சஹாபி கூறுகின்றார்: நான் முஸ்லிமாவதற்கான காரணம் என்னவென்றால், முஸ்லிம்களை ஏமாற்றி 70 காரிகளை ஷஹீதாக்கிய அந்த சமுதாயத்தில் விருந்தாளியாக தங்கியிருந்தேன். அவர்கள் முஸ்லிம்களை தாக்கியபோது அவர்களில் சிலர் மலையின் மேல் பகுதிக்கு ஏறிச் சென்றனர்.

மேலும் சிலர் அவர்களை எதிர்த்து நின்றனர். எதிரிகள் அதிகமாக இருந்தனர். முஸ்லிம்களோ மிகக் குறைவாகவே இருந்தனர். அவர்களும் கூட எவ்வித ஆயுதமும் இல்லாமல் இருந்தனர். அவர்கள் ஒவ்வொருவராக அனைத்து முஸ்லிம்களையும் ஷஹீதாக்கினர்.

இறுதியில் ஒரே ஒரு சஹாபி மட்டும் எஞ்சியிருந்தார். அவர்கள் ஹிஜ்ரத்தில் பெருமானார் (ஸல்) அவர்களுடன் கலந்து கொண்டிருந்தார். மேலும் அவர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் அடிமையாவார். அவரின் பெயர் ஆமிர் பின் ஃபுஹைரா (ரலி) ஆகும்.

அதிகமான மக்கள் இணைந்து அவரை பிடித்தார்கள். ஒரு நபர் வேகமாக வாளை அவரது நெஞ்சுப் பகுதியில் குத்தினார். வாள் பட்டவுடன் அவரது நாவிலிருந்து, فُزْتُ وَرَبِّ الْكَعْبَةِ அதாவது கஅபாவின் இறைவன் மீது ஆணையாக! நான் வெற்றி பெற்று விட்டேன் என்ற வார்த்தை வெளிவந்தது.

அவரது நாவிலிருந்து இந்த வார்த்தையை கேட்டபோது நான் வியப்படைந்தேன். அப்போது நான் கூறினேன். இந்த நபர் தனது உறவினர்களை விட்டும், மனைவி மக்களை விட்டும் தொலைவில் இருக்கிறார். இவ்வளவு பெரிய துன்பம் அவரை வந்தடைந்துள்ளது. அவரது நெஞ்சில் வாளால் தாக்கப்பட்டது. ஆனால் அவர் மரணிக்கும்போது கூட, கஅபாவின் இறைவன் மீது ஆணையாக! நான் வெற்றி பெற்று விட்டேன் என்றே கூறுகிறார். இந்த நபர் பைத்தியக்காரரா?

எனவே நான் வேறு சிலரிடமும் அவருடைய நாவிலிருந்து வந்த வார்த்தை தொடர்பாக கேட்டேன். அதற்கு அவர்கள், உங்களுக்கு தெரியாது. இவர்கள் முஸ்லிம்கள் ஆவர். உண்மையில் இவர்கள் பைத்தியக்காரர்கள். இவர்கள் இறைவனது வழியில் மரணித்தால் இறைவன் அவர்கள் மீது திருப்தி கொண்டு விட்டான். மேலும் அவர்கள் வெற்றி பெற்று விட்டார்கள் என்று கருதுகின்றனர்.

மேலும் அவர்கள் கூறுகின்றார்கள்: இது எனது இயல்பில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியது என்றால், நான் இவர்களது தலைமையகத்திற்கு சென்று பார்ப்பேன். மேலும் இந்த மக்களின் மார்க்கத்தை படிப்பேன் என்று முடிவு செய்தேன். அந்த சஹாபா கூறுகின்றார்கள்: ஒரு நபரது உள்ளத்தில் வாளால் தாக்கப்படுகிறது. அவர் நாட்டை விட்டு வெகு தொலைவில் இருக்கின்றார். அவரது எந்த அன்பிற்குரியவரும், உறவினரும் அருகில் கிடையாது. அவரது நாவிலிருந்து فُزْتُ وَرَبِّ الْكَعْبَةِ அதாவது கஃபாவின் இறைவன் மீது ஆணையாக! நான் வெற்றி பெற்று விட்டேன் என்று வெளிவருகிறது.

ஆக இது அவரிடம் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியது என்றால் அந்த நபர் பிறகு முஸ்லிமானார். இந்த தாக்குதல் குறித்து அவர் கூறி வந்தார். فُزْتُ وَرَبِّ الْكَعْبَةِ என்ற வாசகத்தை அடைந்தும் அவரது உடலில் நடுங்க ஆரம்பித்து விடும். மேலும் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தோடும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் எழுதுகின்றார்கள்:

இஸ்லாம் தனது சிறப்பம்சத்தின் மூலமாகவே பரவியது. வாளினால் அல்ல.

(சேரே ரூஹானி, அன்வாருல் உலூம் தொகுதி 22 பக்கம் 250–251)

மேலும் ஹஸ்ரத் ஆமிர் பின் ஃபுஹைரா (ரலி) ஷஹீதானபோது அன்னாரது நாவிலிருந்து فُزْتُ وَرَبِّ الْكَعْبَةِ என்ற வார்த்தை மற்றும் فُزْتُ وَاللهِ என்ற வார்த்தை வெளிவந்ததாக கூறப்படுகிறது. இரண்டு அறிவிப்புகளாகும். இந்த சொற்கள் மேலும் சில சஹாபாக்களின் நாவிலிருந்தும் வெளிவந்தது.

இது தொடர்பாகவும் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் எடுத்துக் கூறியவாறு கூறுகின்றார்கள்:

வரலாற்றைப் படிப்பதனால் தெரிய வருவது என்னவென்றால், சஹாபாக்கள் போருக்கு எப்படி செல்வார்கள் என்றால் போரில் ஷஹீதாவது அவர்களின் மன அமைதிக்கும்; மகிழ்ச்சிக்கும் காரணியாக அமையும் என்பதை அறிந்திருந்தார்கள். அவர்களுக்கு சண்டையில் ஏதாவது துக்கம் ஏற்பட்டிருந்தால் அதை துக்கமாக கருதுவதில்லை.

மாறாக அதனை மன திருப்தியாக கருதி வந்தார்கள். பெரும்பாலான சஹாபாக்களின் வரலாற்றுச் சம்பவங்களிலிருந்து, அவர்கள் இறை வழியில் கொல்லப்படுவதையே தமது மின

அமைதிக்கு வழிவகுக்கும் என்று கருதி வந்ததாக தெரிய வருகின்றது.

எடுத்துக்காட்டாக, திருக்குர்ஆனை மனனம் செய்தவர்கள் அரபு நாட்டின் ஒரு கோத்திரத்தாருக்கு தப்லீக் செய்வதற்காக அனுப்பப்பட்டார்கள். அவர்களில் ஹராம் பின் மல்ஹான் (ரலி) அவர்கள் இஸ்லாத்தின் தூதுச் செய்தியை ஆமிர் கோத்திரத்தின் தலைவர் ஆமிர் பின் துஃபைலிடம் கொண்டு சென்றார்கள். மற்ற சஹாபாக்கள் பின்னால் இருந்தார்கள். ஆரம்பத்தில் ஆமிர் பின் துஃபைல் மற்றும் அவருடன் இருந்தவர்கள் நயவஞ்சகத்தனத்தை வெளிப்படுத்தி அவர்களை எதிர்த்தார்கள்.

ஆனால் பிறகு அவர்கள் அமர்ந்து தப்லீக் செய்ய ஆரம்பித்தபோது அவர்களில் சில விஷமிகள் ஒரு தீய நபருக்கு சைகை செய்தார்கள். அவன் சைகையை பார்த்து உடனேயே ஹராம் பின் மல்ஹானை பின்னால் இருந்தவாறு வாளால் குத்தினான். மேலும் அவர்கள் கீழே விழுந்தார்கள். அப்போதும் கூட அவர்களது நாவில், اَللّٰہُ اَکْبَر۔ فُزْتُ وَرَبِّ الْکَعْبَۃِ அதாவது கஅபாவின் இறைவன் மீது ஆணையாக! நான் இரட்சிப்பை பெற்று விட்டேன் என்ற சொல்லே வெளிவந்தது.

பிறகு இந்த விஷமிகள் எஞ்சிய சஹாபாக்களையும் சூழ்ந்து அவர்கள் மீது தாக்குதல் தொடுத்தனர். அந்த சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களால் விடுதலை செய்யப்பட்ட அடிமையும், ஹிஜ்ரத் பயணத்தில் பெருமானார் (ஸல்) அவர்களுடன் பயணம் செய்த ஆமிர் பின் ஃபஹைரா (ரலி) அவர்களை கொலை செய்தவர்தான் பின்னாட்களில் முஸ்லிமாகி விட்டார்.

அவர் முஸ்லிமானதற்காக காரணத்தைக் கூறும்போது, நான் ஆமிர் பின் ஃபஹைரா (ரலி) அவர்களை ஷஹீதாக்கினேன். அவரது நாவிலிருந்து فُزْتُ وَرَبِّ الْکَعْبَۃِ அதாவது கஅபாவின் இறைவன் மீது ஆணையாக! நான் எனது நோக்கத்தை அடைந்து விட்டேன் என்ற சொல்வே வெளிவந்தது என்று கூறுகிறார். இந்த சம்பவம் கூறுவது என்னவென்றால், சஹாபாக்களுக்கு மரணம் என்பது துக்கத்தை தருவதற்கு பகரமாக மகிழ்ச்சியை தரக்கூடியதாக இருந்தது.

(ஏக் ஆயத் கி புர் மஆருஃப் தஃப்ஸீர், அன்வாருல் உலூம் தொகுதி 18 பக்கம் 612,613)

எனவே அம்மக்கள் மிகவும் நற்பேறு பெற்ற மக்கள் ஆவர். குறிப்பாக ஆமிர் பின் ஃபுஹைரா (ரலி) அவர்களுக்கு ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களுக்கு தொண்டு செய்யும் சந்தர்ப்பம் கிடைத்தது. பெருமானார் (ஸல்) அவர்களுக்க தொண்டு செய்யும் சந்தர்ப்பம் கிடைத்தது. அன்னாரோடு ஹிஜ்ரத் செய்யும் சந்தர்ப்பம் கிடைத்தது.

பிறகு இஸ்லாத்திற்காகவும், சவ்ர் குகையில் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு உணவிற்கான ஏற்பாட்டை செய்து கொடுக்கவும், பாலை கொண்டு சேர்ப்பதற்காகவும் அன்னார் நியமிக்கப்பட்டிருந்தார்கள். அன்னார் தொடர்ச்சியாக மூன்று நாட்கள் அங்கு ஆடுகளை கொண்டு சென்றார்கள். ஆட்டின் பாலை அங்கு கொண்டு சேர்த்தார்கள்.

பிறகு பெருமானார் (ஸல்) அவர்களது கூற்றிற்கிணங்க சுராக்காவிற்கு அமைதிக்கான உத்திரவாதத்தை எழுதிக் கொடுக்கும் சந்தர்ப்பமும் அவர்களுக்கு கிடைத்தது. பிறகு அவர்களது துஆவின் காரணமாக தொலைவில் பெருமானார் (ஸல்) அவர்கள் இருந்த போதிலும் அன்னாருக்கு அந்த செய்தி கிடைத்து. அன்னார் எல்லா சந்தர்ப்பத்தில் பற்றை வெளிப்படுத்தினார்கள். அல்லாஹ் அன்னாரது அந்தஸ்தை உயர்த்திக் கொண்டே செல்வானாக.

## எல்லா வகையான இழிவையும், வறுமையையும் சகித்துக் கொண்டவாறு இறைவனிடம் நன்றியுணர்வை வெளிப்படுத்த வேண்டும்

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் பெற்ற இறை நெருக்கத்திற்கும் இதுவே காரணமாக இருந்தது.... இப்ராஹீம் யாரென்றால் அவர் நன்றியுணர்வை வெளிப்படுத்திக் காட்டினார். இறைவனுடன் நன்றியுணர்வையும் உண்மையையும் பற்றையும் வெளிப்படுத்துவது என்பது ஒரு வகையான மரணத்தை விரும்புகின்றது.

மனிதன் உலகம் மற்றும் அதன் அனைத்து சுகபோகங்கள் மற்றும் கண்ணியத்தை இழந்து விடத் தயாராகாத வரை மேலும் எல்லா வகையான இழிவு, கடினம் மற்றும் வறுமையை இறைவனுக்காக சகித்துக் கொள்வதற்கு தயாராகாத வரை இந்த பண்பு மனிதனிடம் உருவாக முடியாது. மனிதன் மரம் அல்லது கல்லை வணங்குவது மட்டும் சிலை வணக்கம் அல்ல.

மாறாக, அல்லாஹ்வின் நெருக்கத்திற்கு தடையாக நிற்கும் ஒவ்வொரு விஷயமும் சிலைதான். மனிதன் தன்னுள் எந்த அளவுக்கு அந்த சிலைகளை வைத்திருக்கின்றான் என்றால் நான் சிலையை வணங்குகின்றேன் என்பதை அவன் உணர்வதே இல்லை. இன்றைய காலத்தில் சிலருக்கு நாடகங்கள் சிலையாக உள்ளது. சிலருக்கு இன்டர்நெட் சிலையாக உள்ளது. சிலருக்கு உலக சம்பாத்தியம் சிலைகளாக உள்ளன. இன்னும் சிலருக்கு பலவகையான ஆசைகள் சிலைகளாகி விட்டன.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியது போன்று 'நான் சிலை வணக்கம் செய்கிறேன்' என்பதே மனிதனுக்கு தெரிவதில்லை. எனவே, மனிதன் இறைவனுக்காக முழுமையாக ஆகி விடாத வரை அவன் வழியில் எல்லா வகையான கஷ்டங்களையும் சகித்துக் கொள்ள தயாராகாத வரை அவரிடம் உண்மை மற்றும் நன்றியுணர்வு உருவாகுவது கடினமாகும்

(குத்பா ஜுமுஆ 28.10.2016)

## திருக்குர்ஆனிலிருந்து....

நீங்கள் அல்லாஹ்வின் வழியில் முயல வேண்டிய முறையில் முழுவதுமாக முயலுங்கள். (ஏனென்றால்) அவன் உங்களைத் தேர்ந்தெடுத்துள்ளான். மாக்கத்தி(ன் போதனையி)ல் அவன் உங்களுக்கு எந்தக் கஷ்டத்தையும் ஏற்படுத்தவில்லை. (நம்பிக்கை கொண்டவர்களே!) உங்கள் தந்தை இப்ராஹீமின் மார்க்கத்தை(த் தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள். ஏனென்றால்) இத்தூதர் உங்களுக்கு சாட்சியாக இருக்கவும் நீங்கள் ஏனைய மக்களுக்கு சாட்சியாக இருக்கவும் அவன் இதற்கு முன்னுள்ள (வேதத்)திலும் இ(ந்த வேதத்)திலும் முஸ்லிம்கள் என்று பெயர் சூட்டினான். (22:79)

**:.பைஸல் ஹமீது இலாஹி**
மற்றும் குடும்பத்தினர், திட்டச்சேரி.

### *நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்*

தினந்தோறும் காலை 9.00 மணியிலிருந்து 11.00 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)

***தொலைபேசி எண்:***

***1800 425 40000***

இந்த **TOLL FREE** எண்ணில் :.போன் செய்து அஹ்மதிய்யா ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.

124 -வது காதியான் ஆண்டு மாநாடு 2018 பற்றிய சுருக்கமான அறிக்கை (மாநாடு துவக்கப்பட்டதிலிருந்து இது 127 -வது வருடமாகும்)

## அஹ்மதிய்யத்தின் தலைமையகமான காதியான் தாருல் அமானில் 124 -வது அருளுக்குரிய ஆண்டு மாநாடு வெற்றிகரமாக நடைபெற்றது

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது கொண்டிருந்த அன்பு மற்றும் நேசத்தின் தகுதியை வேறு எவராலும் அடைய முடியாது. அன்னாரது ஒவ்வொரு சொற்களும் அல்லாஹ் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது கொண்டிருந்த அன்பில் தம்மை மாய்த்ததற்கான ஆதாரமாகும்**

**இந்த கடைசி நாளையும் ஸலவாத்தைக் கொண்டு நிரப்புங்கள். மேலும் புதிய ஆண்டையும் ஸலவாத்தைக் கொண்டு ஆரம்பம் செய்யுங்கள். இதன் மூலம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது இருப்பின் மூலம் தொடர்புடைய அந்த அருட்களை விரைவாக நாம் பெறக் கூடியவர்களாக ஆக வேண்டும்**

**முஸ்லிம் தொலைக்காட்சி அஹ்மதிய்யா மூலமாக ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள், மாநாட்டில் பங்கு பெறுபவர்களிடம் அகப்பார்வைக்கு எழுச்சியூட்டக்கூடிய நிறைவுரையை நிகழ்த்தினார்கள்**

**நான் இந்த நகரத்தில் அதாவது காதியானில் இறைவனைப் பார்த்து விட்டேன். நான் இஸ்லாத்தின் அனைத்து முன்னறிவிப்புகளையும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது உண்மையான தொண்டரின் கைகளில் முழுமையடைவதைக் கண்டேன்**

**மஹ்திக்கான வாதம் செய்த பலர் உலகத்தில் வந்துள்ளனர். அவர்கள் தமது பிரச்சாரத்தை உலகில் பரப்புவதற்காக முன்னறிவிப்புகளை செய்தனர். ஆனால் ஒருவரைத் தவிர வேறெவரது கூற்றும் நிறைவேறவில்லை. மேலும் அந்த நபர் பெஹஷ்தி மக்பராவில் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளார். அவரது கல்லறையில் " வாக்களிக்கப்பட்ட மஸீஹும் இமாம் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானியின் அருளுக்குரிய கல்லறை என்று எழுதப்பட்டுள்ளது"**

**நான் அஹ்மதிகளின் பிரசுரங்களைப் படித்தேன். மேலும் அஹ்மதி முஸ்லிம்களை சந்தித்து அஹ்மதிய்யத்தான் உண்மையான இஸ்லாம் என்றும் அஹ்மதிகள் மற்ற முஸ்லிம்களை விடவும் அதிக உண்மையாளர்களும் உண்மையான முஸ்லிம்களும் ஆவர் என்ற இந்த முடிவை எட்டினேன்**

**மேலும் எத்தனை நூற்றாண்டுகள் கழியும் என்பது எனக்குத் தெரியாது. ஆனால் காதியானிலிருந்து உரத்த குரலில் எழுப்பப்படுகின்ற அந்த முழக்கமே உலகத்தில் கேட்கும் என்பதை நான் நன்கறிவேன்**

**காதியான் ஆண்டு மாநாட்டில் கலந்து கொண்ட புதிய அஹ்மதிகளின் ஈமானுக்கு வலுவூட்டக்கூடிய நற்குறிப்புகள்**

**உலகத்தில் ஜமாஅத் பரப்பி வருகின்ற அமைதிக்கான தூதுச் செய்தி போற்றத்தக்கதாகும். நான் ஹுஸூர் அவர்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அவர்கள் உலகத்தில் அமைதியைப் பரப்புகின்றார்கள். உங்களது ஜமாஅத்தின் கலீஃபா அவர்கள் முழு உலகத்திலும் அன்பு மற்றும் சகோதரத்துவத்தின் போதனையை வழங்குகின்றார்கள். மேலும் முழு உலகையும் அழிவிலிருந்து காப்பாற்றுவதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளார்கள்**

**முஸ்லிம் சமுதாயம் எப்போதும் சீக்கிய சமுதாயத்தை ஏற்றுக் கொண்டவர்களோடு அனுதாபத்தோடு நடந்து கொண்டுள்ளது. முஸ்லிம் சமுதாயம் ஒவ்வொரு கஷ்டமான நேரத்திலும் எங்களுக்கு உதவி செய்துள்ளது. இந்த இரண்டு சமுதாயங்களின் சிறப்புத்தன்மை என்னவென்றால், இவர்கள் தனித்தவனும், இணையற்றவனுமாகிய இறைவனை வணங்குகின்றனர்**

**உலகத்தில் மனிதத்துவத்தின் முழக்கத்தை முழங்குகின்ற மாநாடுகள் மிகக் குறைவாகவே நடைபெறுகின்றன. மனித இனத்திற்கு தொண்டு செய்வது மிகப்பெரிய வியக்கத்தக் பணியாகும். அதை ஜமாஅத் செய்து வருகின்றது**

**இன்று எத்தகைய சிறப்பான முறையில் அன்பு மற்றும் அமைதியின் தூதுச் செய்தியை ஜமாஅத் தரப்பிலிருந்து வழங்கப்படுகின்றதோ அது போற்றத்தக்கதாகும்**

**காதியான் ஆண்டு மாநாட்டில் கலந்து கொண்ட சில அரசியல் மற்றும் மார்க்கத் தலைவர்களின் தாக்கங்கள்**

**தகவல்: மன்ஸூர் அஹ்மது மஸ்ரூர் (அறிக்கைத் துறை)**

- 48 நாடுகளின் பிரதிநிதிகள் மாநாட்டில் பங்கேற்றனர்
- 18,864 பேர் மாநாட்டில் கலந்து கொண்டனர்
- ஹுஸூர் அவர்கள் மாநாட்டிற்காக நிகழ்த்திய நிறைவுரையின்போது இலண்டனில் 5,345 பேர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்
- தஹஜ்ஜுது தொழுகை
- திருக்குர்ஆன் தர்ஸ் மற்றும் இறைவனை நினைவு கூர்கின்ற சுற்றுச் சூழல்
- கண்ணியத்திற்குரிய ஆலிம்களின் பொருட்செறிவு நிறைந்துள்ள சொற்பொழிவுகள்
- மார்க்கத் தோற்றுனர்களின் மாநாடு
- கண்ணியத்திற்குரிய விருந்தினர்களின் அறிமுக சொற்பொழிவுகள்
- நமது நாட்டில் மற்றும் வெளிநாடுகளில் பேசப்படுகின்ற பல்வேறு மொழிகளில் மொழியாக்கத்திற்கான ஏற்பாடு
- ஜமாஅத் சகோதர்களுக்கு அவர்களது அறிவை அதிகப்படுத்தும் வகையில் தர்பிய்யத் விஷயங்கள் அடங்கிய குறும்படம் காட்டப்பட்டது
- பல்வேறு அறிவு சார்ந்த தகவல்களை தரக்கூடிய வகையில் கண்காட்சி அமைக்கப்பட்டிருந்தது
- 34 திருமணங்களுக்கான அறிவிப்பு செய்யப்பட்டது
- அச்சகம் மற்றும் மின்னணு ஊடகத்தில் மாநாடு பற்றிய கவரேஜ்
- அமைதி நிறைந்த நல்ல சூழ்நிலையில் எல்லா நிகழ்ச்சிகளும் சிறப்பாக நிறைவை எட்டியது
- 19 முதல் 21 டிசம்பர் வரை அரபி நிகழ்ச்சியான اِسْمَعُوْا صَوْتَ السَّمَآءِ جَآءَ الْمَسِيْحُ جَآءَ الْمَسِيْحُ MTA இன்டர்நேஷனில் காதியானிலுள்ள ஸ்டூடியோவிலிருந்து நேரலை ஆக ஒளிபரப்பப்பட்டது
- 3 முதல் 5 ஜனவரி வரை *"The Messiah of the Age"* என்ற தலைப்பில் ஆப்பிரிக்க மக்களுக்காக நேரலை நிகழ்ச்சி MTA –வில் ஒளிபரப்பப்பட்டது

*(சென்ற இதழின் தொடர்ச்சி...)*

ஒரு முறை ஒரு யூதருடைய ஜனாஸா வந்து கொண்டிருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மரியாதைக்காக எழுந்து நின்றார்கள். அல்லாஹ்வின் தூதர் அவர்களே! இது யூதரின் ஜனாஸாவாகும் என்று ஒருவர் கூறினார். அதற்கு அன்னார், அவரிடம் உயிர் இருந்ததில்லையா? அவர் மனிதர் இல்லையா? எனக் கேட்டார்கள். (புகாரி, கிதாவுல் ஜனாயிஸ்)

பத்ர் போரில் இறந்த இணைவக்கும் 24 தலைவர்களின் சடலத்தையும் அவர்களே பத்ர் களத்தின் ஒரு குழியில் அடக்கம் செய்தார்கள். (புகாரி)

அஹ்ஸாப் போரில் இணை வைப்பவர்களின் ஒரு தலைவர் நவ்ஃபில் பின் அப்தில்லாஹ் மக்ஸம என்பவர் அழிவுக்குள்ளானார். முஸ்லிம்கள் நமது தலைவருடன் அவமரியாதையுடன் நடந்து கொள்ளக்கூடாது என்பதற்காக அவர்கள், நவ்ஃபலின் சடலத்தை கொடுத்து விடுங்கள். நாங்கள் 10 ஆயிரம் திர்ஹம் தருகின்றோம் என்று தூது அனுப்பினார்கள். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நாங்கள் சடலத்திற்கு காசு வாங்குவதில்லை. நீங்கள் உங்கள் சடலத்தை எடுத்துச் செல்லுங்கள்.

(தலாயிலுன் நுபுவ்வத்தி லில்பைஹகி தொகுதி 3)

மனிதத்துவத்தின் கண்ணியம் தொடர்பான திருக்குர்ஆன் ஓர் அப்பாவி மனிதரை கொல்வது முழு மனித இனத்தையும் கொள்வதற்கு சமமாகும் என்று கூறுகிறது.

அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகின்றான்: நாட்டில் குழப்பத்தைப் பரப்பினாலே அன்றி கொலை செய்கின்றவர் எல்லா மக்களையும் கொலை செய்தவர் போன்றவராவார். ஒருவருக்கு உயிர் கொடுக்கின்றவர் எல்லா மக்களுக்கும் உயிர் கொடுப்பவரைப் போன்றவராவார். (5:33)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹிஜ்ரி 9–ஆம் ஆண்டு துல் ஹஜ் மாதத்தில் வருகை தந்திருந்த முஸ்லிம்களுக்கு முன்னால் நின்றவாறு இவ்வாறு கூறினார்கள்:

மக்களே! கேளுங்கள். உங்கள் இறைவன் ஒருவன் ஆவான். அவ்வாறே உங்கள் தந்தை ஒருவர் ஆவார். எந்தவோர் அரபிக்கும் அரபி அல்லாதவரை விடவோ, எந்தவோர் அரபி அல்லாதவருக்கும் அரபியை விடவோ எந்தச் சிறப்பும் இல்லை. எந்தக் கருப்பருக்கும் வெள்ளையரை விடவோ அல்லது எந்த வெள்ளையருக்கும் கருப்பரை விடவோ எந்தச் சிறப்பும் இல்லை. இறையச்சம் கொண்டவராக இருப்பவரைத் தவிர. உங்களில் அதிக இறையச்சம் கொண்டவரே அல்லாஹ்விடத்தில் உங்களில் அதிக கண்ணியமிக்கவர் ஆவார்.

மேலும் அன்னார் கூறினார்கள்: எல்லா மனிதர்களும் – அவர் எந்த சமுதாயத்தை சார்ந்தவராக இருந்தாலும் எந்த விதமானவராக இருந்தாலும் – மனிதன் என்ற முறையில் அவர்கள் ஒரே அந்தஸ்தைக் கெண்டவராக இருக்கின்றனர். மேலும் தமது இரண்டு விரல்களையும் ஒன்றாக இணைத்து, இந்த இரண்டு விரல்கள் ஒன்றுக்கொன்று சரிசமமாக இருக்கின்றதைப் போன்றே மனிதகுலமாகிய நீங்கள் ஒருவருக்கொருவர் சரிசமமாக இருக்கின்றீர்கள். உங்களில் ஒருவர் மற்றவர் மீது சிறப்பை வெளிப்படுத்துவதற்கோ அல்லது அந்தஸ்தை வெளிப்படுத்துவதற்கோ எந்த உரிமையும் இல்லை. நீங்கள் ஒருவருக்கொருவர் சகோதரர்கள் போன்றவர்கள் ஆவீர்கள். (புகாரி)

ஓர் இந்திய தத்துவவாதி திரு. ராம கிருஷ்ணா ராவ் பல நூல்களை எழுதியவர். இவருக்கு 2011 ஆம் ஆண்டு இந்திய அரசாங்கம் பத்ம ஷிரி விருதை வழங்கி கண்ணியப்படுத்தியது. அவர் எழுதுகின்றார்: ‟முஹம்மது அவர்கள் வழங்கிய உலக சகோதரத்துவம் தொடர்பான கோட்பாடுகள் மற்றும் மனிதனின் சமத்துவம் தொடர்பான போதனைகள் மனிதத்துவத்தின் சமூக முன்னேற்றத்தில் அன்னாரின் மகத்தான பங்கை பிரதிபலிக்கின்றன. எல்லா பெரிய மார்க்கங்களும் இந்த போதனைகளையே செய்துள்ளன. ஆனால் இஸ்லாத்தின் தோற்றுனர் இந்த கொள்கைக்கு செயல் வடிவத்தை எடுத்து வைத்திருக்கிறார்கள்.

ஒருவேளை பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு உலக ஐக்கிய நாடுகளின் மனசாட்சி விழிப்புணர்வு கொள்வதன் காரணமாக தலைமுறை தொடர்பான காழ்ப்புணர்ச்சிகள் முடிவுக்குக் கொண்டு வரலாம். எல்லா மனிதர்களும் சகோதரத்துவம் என்னும் ஒரே மணியில் கோர்க்கப்படலாம். அப்போது இந்த விஷயத்தின் முக்கியத்துவம் கணிக்கப்படலாம். ஆற்றல்மிக்கவர் தனது ஆற்றலினால் வாரிசுரிமையைப் பெறும் சம்பிரதாயம் நிலவி வருகிறது. ஆனால் இஸ்லாம் நலிந்தவர்களின் பாதுகாப்பை நிலைநாட்டியது. அது பெற்றோர்களிடமிருந்து பெண்களுக்கான வாரிசுரிமையை வழங்கியது. மக்களாட்சியின் ஆரம்பப் பள்ளிக்கூடம் என அழைக்கப்படும் இங்கிலாந்தில் இஸ்லாத்தின் இந்த கொள்கை 1881–ல்தான் மேற்கொள்ளப்பட்டது.

மேலும் இந்தச் சட்டம் The Married Womans Act (திருமணமான பெண்களுக்கான சட்டம்) என்ற பெயரால் அழைக்கப்பட்டது. மேலும் முஹம்மது அவர்களின் காலத்தைச் சேர்ந்தவர்கள் – அவர்கள் நண்பர்களாக இருந்தாலும், பகைவர்களாக இருந்தாலும் முஹம்மது அவர்களின் சிறப்பான பண்புகளையும், கறைபடியாத நேர்மையையும், தூய்மையையும், இறையச்சத்தையும் மட்டுமின்றி வாழ்வின் எல்லா களத்திலும் மனித பழக்க வழக்கங்கள் மற்றும் நடந்து கொள்ளும் முறைகள் ஆகியவற்றில் அன்னாரின் முன்மாதிரியை மிகச் சிறந்ததாக ஒப்புக் கொள்கின்றனர்.....

ஒரு நேர்மையான மனிதர் இறைவனின் மிகச் சிறந்த படைப்பு எனக் கூறப்படுகிறது. முஹம்மது அவர்கள் நேர்மையிலும், நாணயத்திலும் மிகவும் உயர்ந்த அந்தஸ்த்தைப் பெற்றிருந்தார். மனிதத்துவம் என்பது அன்னாரிடம் இயல்பாகவே காணப்பட்டது. அன்னாரின் ஆன்மா, அன்பு மற்றும் அனுதாபத்தின் பாடலைப் பாடிக் கொண்டிருந்தது. மனிதனுக்கு தொண்டாற்றுவது, மனிதனை உயர்த்துவது, மனிதனை தூய்மைப்படுத்துவது, மனிதனுக்கு போதனை வழங்குவது, மனிதனை மனிதனாக்குவது ஆகியவை அன்னாரின் குறிக்கோளாகவும், வாழ்வின் நோக்கமாகவும் இருந்தது. அன்னாரின் வாழ்வின் ஒரே தூண்டுதலும் வழிகாட்டும் கோட்பாடும் மனித குலத்திற்கு நன்மை செய்வதாகவே இருந்தது. அது அன்னாரின் சிந்தனை, சொற்கள், செயல்கள் ஆகியவற்றிலிருந்து தெளிவாகிறது.”

(ஹாஃபிஸ் முஸஃப்பர் அஹ்மது அவர்கள் இயற்றிய ‘உஸ்வாயே இன்ஸானே காமில்’ பக்கம் 628–629)

நாஸிர் ஸாஹிப் அஃலா அவர்களின் இந்த சொற்பொழிவிற்குப் பிறகு மாநாட்டின் முதல் நாளின் அமர்வு நிறைவு பெற்றது.

**ஜுமுஆ தொழுகை:**

முதல் நாளின் இரண்டாம் அவர்விற்கு முன்பாக மாநாட்டுத் திடலில் ஜுமுஆ தொழுகை நடத்தப்பட்டது. 21 டிசம்பர் 2018 அன்று ஹுஸூர் அவர்கள் ஆற்றிய குத்பாவிலிருந்து அதன் சுருக்கத்தை மதிப்பிற்குரிய மவ்லானா கரீமுத்தீன் சாஹிப் (சத்ர் கஸா போர்ட் காதியான்) அவர்கள் படித்துக் காட்டினார்கள். பிறகு லுஹர், அஸர் தொழுகைகள் ஒன்றாக சேர்த்து தொழப்பட்டது.

*(தொடரும் – இன்ஷா அல்லாஹ்...)*

EDITOR
Moulvai.O.M. MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
Muallim. A. KHALEEL AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

The Weekly **BADAR** Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 4 Thursday 21 February 2019 Issue No. 8

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.500/- (Per Issue Rs. 9/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

*(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)*

அதாவது இறையச்சமுடையவர்கள் அல்லாஹ்வின் நண்பர்கள் ஆவர். ஆக, சிறிதளவு துன்பத்தை மேற்கொள்வதினால் இறைவனது அன்பிற்குரியவர்களாக ஆகுவது எத்தகைய அருட்கொடையாக இருக்கின்றது.

இன்றைய காலகட்டம் எந்த அளவிற்குக் கோழைத்தனமான காலகட்டமாக இருக்கின்றது. ஏதாவதோர் ஆட்சியாளர் அல்லது மேலதிகாரி எவரிடமாவது, நீ எனது நண்பர் எனக் கூறினால் அல்லது அவருக்கு நாற்காலியைக் கொடுத்து கண்ணியம் செய்தால் அவர் ஆணவம் கொள்கிறார்; பெருமை கொண்டு அலைகிறார். ஆனால் எந்த நபரை அல்லாஹ் தனது நேசர் என்றும் நண்பர் என்றும் அழைப்பானோ அந்த மனிதரின் கண்ணியம் எந்த அளவுக்கு உயர்வானதாக இருக்கும்.

அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நாவினால் இந்த வாக்குறுதியை வழங்கினான். புகாரியில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

لَایَزَالُ یَتَقَرَّبُ عَبْدِیْ بِالنَّوَافِلِ حَتّٰی اُحِبَّہٗ فَاِذَا اَحْبَبْتُہٗ کُنْتُ سَمْعَہُ الَّذِیْ یَسْمَعُ بِہٖ وَبَصَرَہُ الَّذِیْ یُبْصِرُ بِہٖ وَیَدَہُ الَّتِیْ یَبْطِشُ بِھَا وَرِجْلَہُ الَّتِیْ یَمْشِیْ بِھَا وَلَئِنْ سَاَلَنِیْ لَاُعْطِیَنَّہٗ وَلَئِنِ اسْتَعَاذَنِیْ لَاُعِیْذَنَّہٗ

அதாவது அல்லாஹ் கூறுகின்றான்: எனது நண்பர் நஃபில்கள் மூலமாக என்னுடன் நெருக்கத்தை ஏற்படுத்திக் கொள்கின்றார். (சஹீஹுல் புகாரி)

**கடமைகள் மற்றும் நஃபில்கள்**

மனிதன் எந்த அளவுக்கு நன்மைகள் செய்கின்றானோ அதற்கு இரண்டு அம்சங்கள் இருக்கின்றன. ஒன்று கடமைகள். மற்றொன்று நஃபில்கள்.

கடமைகள் அதாவது மனிதன் மீது கடமையாக்கப்பட்டவை. கடனை அடைப்பது அல்லது நன்மைக்குப் பகரமாக நன்மை செய்வது போன்றவை. இந்த கடமைகள் மட்டுமின்றி ஒவ்வொரு நன்மையுடனும் நஃபில்களும் (உபரியானவை) இருக்கின்றன. அதாவது எத்தகைய நன்மை என்றால் அவருக்கு செலுத்த வேண்டியதை விட அதிகமாக செலுத்துவது. உதாரணமாக, பேருபகாரத்திற்குப் பகரமாக பேருபகாரம் செய்வது மட்டுமின்றி மேலும் அதிகமாக பேருபகாரம் செய்வது நஃபில்களாகும். இது முழுமையான நிறைவான கடமையாகும்.

இந்த நபிமொழியில், இறைநேசர்களின் மார்க்கக் கடமைகளின் முழுமை நவாஃபில்கள் மூலமாக ஏற்படுகின்றது என்று கூறப்பட்டுள்ளது. உதாரணமாக, ஸக்காத் மட்டுமின்றி அவர்கள் சதகாவும் கொடுக்கின்றனர். அல்லாஹ் அத்தகையவர்களின் நண்பனாக ஆகி விடுகின்றான்.

அல்லாஹ் கூறுகின்றான்: அவர்களுடனான நட்பு எந்த அளவுக்கு இருக்கின்றதென்றால், நான் அவர்களது கையாகவும், காலாகவும் அவர் பேசுகின்ற நாவாகவும் ஆகி விடுகின்றேன்.

**ஒவ்வொரு செயலும் இறைவனது விருப்பத்திற்கேற்ப இருக்க வேண்டும்**

மனிதன் மன எழுச்சியிலிருந்து தூய்மையாகி, மன எழுச்சியை விட்டு விட்டு இறைவனது எண்ணத்திற்கேற்பச் செயல்படும்போது அவனது எந்தவொரு செயலும் ஆகுமானதற்றதாக இருப்பதில்லை. மாறாக, ஒவ்வொரு செயலும் இறைவனது விருப்பத்திற்கேற்பவே இருக்கும். மக்கள் துன்பத்தில் சிக்கிக் கொள்கின்றார்கள் என்றால் அங்கு இறைவனது விருப்பத்திற்கேற்ப அவர்களது செயல்கள் இருப்பதில்லை என்பது தெரிகின்றது. இறைவனது விருப்பம் அதற்கு மாற்றமாக இருக்கின்றது. அத்தகைய மனிதன் தமது மனதின் உணர்வுகளுக்குப் பின்னால் செல்கின்றார்.

உதாரணமாக, கோபத்தினால் எத்தகைய செயல் அவனிடமிருந்து வெளிப்பட்டு விடுகின்றது என்றால் இதன் விளைவாக வழக்குகளில் சிக்கிக் கொள்கின்றான். கைது செய்யப்படுகின்றான். ஆனால் எவர் ஒருவர் இறைவனது வார்த்தைகளுக்கு மாற்றமாக தமது செயல்களை ஆக்கிக் கொள்ள மாட்டாரோ ஒவ்வொரு விஷயத்திலும் இறை வேதத்தின் பக்கம் திரும்புவாரோ அத்தகைய நபருக்கு அல்லாஹ்வின் வேதம் நிச்சயமாக ஆலோசனை வழங்கும்.

அல்லாஹ் கூறுகின்றான்: وَلَا رَطْبٍ وَّلَا یَابِسٍ اِلَّا فِیْ کِتٰبٍ مُّبِیْنٍ

எனவே இறை வேதத்திலிருந்து நாங்கள் ஆலோசனை பெறுவோம் என்று நீங்கள் உறுதியான எண்ணம் கொண்டால் பிறகு நிச்சயமாக நமக்கு ஆலோசனை கிடைக்கும். ஆனால் எவர் தமது உணர்வுகளுக்கு அடிமையாக இருக்கின்றாரோ அவர் நிச்சயமாக இழப்பை பெறுவார். சில நேரங்களில் அவர் அத்தகைய நேரத்தில் தண்டனைக்கும் ஆளாகக் கூடும்.

இதற்கு எதிரில் அல்லாஹ் கூறுகின்றான்: என்னுடன் பேசியவாறும், நடந்தவாறும் பணி செய்கின்ற எனது நண்பர்கள் அதிலேயே அவர்கள் தம்மை மாய்த்துக் கொள்கின்றார்கள். எனவே எவர் தம்மை மாய்த்துக் கொள்வதில் கவனக் குறைவாக இருப்பாரோ அவர் என்னை விட்டும் தூரமாக இருக்கின்றார். ஆனால் எவர் இறைவனுடன் தம்மை மாய்த்துக் கொள்வாரோ அத்தகையவர்களைப் பற்றி அல்லாஹ், அவர்களது ஈமானின் நிலையைப் பற்றி அறிந்து கொள்ள முடியாது என்று கூறுகின்றான்.

அல்லாஹ் கூறுகின்றான்: مَنْ عَادٰی لِیْ وَلِیًّا فَقَدْ اٰذَنْتُہٗ بِالْحَرْبِ

எவர் ஒருவர் எனது நண்பருக்கு எதிராகப் போர் செய்வாரோ அவர் எனக்கு எதிராகப் போர் செய்கின்றார்.

இப்போது பாருங்கள். இறையச்சமுடையவர்களது மகத்துவம் எந்த அளவு மேலோங்கியதாக இருக்கின்றது. மேலும் அவரது அந்தஸ்து எந்த அளவு உயர்வாக இருக்கின்றது. அவரது நெருக்கம் இறைவனிடத்தில் எப்படிப்பட்டதாக இருக்கின்றதென்றால், அவருக்குத் துன்பத்தைக் கொடுப்பது இறைவனுக்குத் துன்பத்தைக் கொடுப்பதைப் போன்றதாக இருக்குமென்றால் இறைவன் அவருக்கு எந்த அளவுக்கு ஒத்துழைப்பு நல்குபவனாகவும், உதவி செய்பவனாகவும் இருக்கின்றான்.

**(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 8–10)**

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of the Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad